www.padippakam.com

மாலிமா வெளியீடு

புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின்
இரண்டாவது கட்டம்
மற்றும்

# இடதுசாரிகளுக்கான சவால்

தோழர் புபுது ஜயகொட

2011 அக்டோபர் 05ம் திகதி கண்டியில் நடத்திய
பகிரங்க உரை

படிப்பகம்

www.padippakam.com

புதிய லிபரல்வாதத்தின் முதலாவது கட்டம்

மற்றும்

# இடதுசாரிகளுக்கான சவால்

படிப்பகம்

www.padippakam.com

புதிய லிபரல்வாதத்தின் முதலாவது கட்டம்

மற்றும்

# இடதுசாரிகளுக்கான சவால்

புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் இரண்டாவது கட்டம்

மற்றும் இடதுசாரிகளுக்கான சவால்

தோழர் புபுது ஜயகொட

2011அக்டோபர் 05 அன்று கண்டியில் நடத்திய

பகிரங்க உரை

மாலிமா வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின்
இரண்டாவது கட்டம் மற்றும் இடதுசாரிகளுக்கான
சவால்

முதல் பதிப்பு - 2011 டிசம்பர்

ISBN - 978-955-0480-06-7

வெளியீடு - மாலிமா வெளியீடு

அச்சிடல் - ஸ்பெக்ட்ரா எட்வடைசிங்
சத்தர்மதிலகாராம மாவத்த
கோனஹேன
கடவத்தை

படிப்பகம்

www.padippakam.com

## முன்னுரை

இந்த சிறிய நூல், மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் புபுது ஜயகொட அவர்களால் 2011 அக்டோபர் 05ம் திகதி கண்டி தபால் கேட்போர் கூடத்தில் "புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் இரண்டாவது கட்டம் மற்றும் இடதுசாரிகளுக்கான சவால்" என்ற தொனிப் பொருளில் நடாத்தப்பட்ட பகிரங்க உரையின் தமிழாக்கமாகும். 2011 செப்டம்பர் மாதம் கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் ஆரம்பமான இந்த தொடர் உரை, நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும், பிரதான நகரங்களிலும் நடத்தப்பட்டதோடு, தோழர் சமீர கொஸ்வத்த, தோழர் வருண ராஜபக்ஸ மற்றும் தோழர் துமிந்த நாகமுவ ஆகியோர் மேற்படி உரையை நடாத்தி வருகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் மீண்டும் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யயப்பட்டதன் பின்னர், புதிய லிபரல்வாத மீளமைப்பை வேகப்படுத்திய நிலையில், இடதுசாரிகளின் முன்னிலையிலுள்ள உண்மையான சவால் என்ன என்பது குறித்து, இந்த தொடர் உரையில் கருத்தாடல் ஒன்று உருவானது. அந்த உரையின் முக்கியத்துவத்துவத்தை கருத்தில் கொண்டு இந்த சிறு நூலை வெளியிடத் தீர்மானித்தோம். எமது இந்த முயற்சிக்காக பல் வேறு விதத்தில் உதவி ஒத்தாசைகள் வழங்கிய அனைவருக்கும் எமது தோழமையுடனான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வெளியீட்டாளர்**

**2011 டிசம்பர்............**

படிப்பகம்

www.padippakam.com



**அன்புக்குரிய அன்னையரே தந்தையரே, தோழர், தோழியரே,**

இங்கு நான் உரையாற்ற தேர்ந்தெடுத்த தலைப்பு , "நவ லிபரல்வாதத்தின் (நவ தாராளமயம்) இரண்டாவது கட்டம் மற்றும் இடதுசாரிகளின் சவால்" என்பதாகும். அதாவது, இடதுசாரிகள் எதிர் கொள்ள நேர்ந்துள்ள எதிர்கால சவாலைப் பற்றி இங்கு நாம் உரையாற்றவுள்ளோம். இந்த உரையாடலில் இரு பக்கங்கள் இருக்கின்றன. முதலாவதாக " புதிய லிபரல்வாதத்தின் இரண்டாம் கட்டம் பற்றி பேசுவதற்கு முன் .இடதுசாரி அமைப்பின் சவால் குறித்து நாம் பேசவேண்டும். எனவே, இந்த உரையை இரு பகுதிகளாகப் பேச விரும்புகின்றேன். புதிய லிபரல்வாதத்தின் இரண்டாம் கட்டம் எத்தகையது என்பது குறித்தும், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் உண்மையான இடதுசாரிகளுக்கான சவால் எத்தகையது என்பது குறித்தும் உரையாற்ற விரும்புகின்றேன்.

புதிய லிபரல்வாதம் எமது நாட்டில் திறந்த பொருளாதாரம் என்றே அழைக்கப்படுகின்றது. என்றாலும் "புதிய லிபரல்வாதம" என்பதே அதற்கான சரியான சொல். புதிய லிபரல்வாதத்தின் இரண்டாவது கட்டம் குறித்து உரையாற்ற வேண்டியதற்கான



படிப்பகம்

www.padippakam.com

பின்னணி என்ன என்பது தொடர்ப்பிலும் உரையாற்ற வேண்டியுள்ளது. அதேபோன்று, இலங்கையின் இடதுசாரி இயக்கத்தை அறிந்துக்கொள்வது எப்படி? இலங்கையின் இடதுசாரி இயக்கம் எந்தப் பாதையை தெரிவு செய்யப்போகின்றது ? எமது குறிக்கோள் என்ன? நாம் பயணிக்கவேண்டிய பாதை எது? என்பன குறித்தும் உரையாடவேண்டிய கட்டாயம் எமக்கு இருக்கின்றது.

"சிகப்பு அக்டோபரின் படிப்பினைகள்" என்ற தொனிப்பொருளில் 1978 நவம்பர் மாதம் தோழர் ரோஹன விஜேவீர கொழும்பில் உரையாற்றினார். அதன்போது, கரீபியன் தீவொன்றில் நடந்த தொழிலாளர் போராட்டமொன்றை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட "கொமடோ" என்ற திரைப்படம் கொழும்பு சினிமா தியேட்டர்களில் திரையிடப்பட்டிருந்தது. அது குறித்து தோழர் ரோகஹன குறிப்பிட்டார். அபட்படத்தின் ஒரு காட்சியில் அதன் கதாநாயகன் இப்படிக் கூறுகிறார், "செல்லவேண்டிய இடத்தை அறியாமல், செல்லும் வழியை அறிந்திருப்பது, செல்லும் வழி தெரியாமல் செல்லவேண்டிய இடத்தை அறிந்திருப்தை விட பயங்கரமானது" என்று. நாம் எதிர்கொண்டுள்ள சவாலும் அது போன்றதுதான். எமது சமூகத்தில் பெரும்பாலானோருக்கு செல்ல வேண்டிய இடத்தை குறித்து விளக்கம் கிடையாது. இடதுசாரிகள் இயக்கம் சென்றடைய் வேண்டிய இடம் குறித்து உரையாடல்கள் இருந்தாலும், எவ்வாறு அங்கு செல்வது என்பது குறித்து தெளிவான கருத்து கிடையாது. இவ்வாறான சூழ்நிலையில் தான் புதிய லிபரல்வாதம் குறித்து உரையாட வேண்டியிருக்கிறது. அதற்கு முன், முதலாளித்துவம் நிலைத்திருந்த முறை குறித்து விளக்கமளிக்க வேண்டும். ஆனால், இது பகிரங்க உரை என்பதால், ஒட்டுமொத்த முதலாளித்துவத்தினது வரலாற்றையும் விரிவாகக் கூற முடியாது. புதிய லிபரல்வாதம உலகில் நிலையாவதற்கு முன்னர் இருந்த முதலாளித்துவ முறை குறித்து ஓரளவு விளக்கமளிக்க விரும்புகினறேன்.



படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவத்தின் ஆரம்பக் கட்டமான சுதந்திரமான போட்டிகள் நிறைந்த கால கட்டத்தின் பின்னர், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகம் ஏகாதிபத்தியத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தது. ஏகாதிபத்தியத்தின் முக்கிய பண்பு என்னவெனில், உலகை பங்கிட்டுக் கொள்வதற்காக ஏகாதிபத்திய நாடுகள் தமக்கிடயே போரிட்டுக் கொள்வது. இவ்வாறான இரண்டு யுத்தங்கள் நடந்தமை எல்லோருக்கும் தெரியும். முதலாவது உலக யுத்தம் முடிவுதக்கு வந்த கையோடு ரஷியா சோஷலிஸ நாடாக மாறியிருந்தது.

இரண்டாவது உலக யுத்தம் முடிவுற்ற பின்னர் உலகில் பல சோஷலிஸ நாடுகள் உருவாகின. ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் நடந்த புரட்சி வெற்றியளித்தது. சோஷலிஸப் புரட்சி வெற்றியடைந்தது. மறுபுறம், கெரில்லா படை மற்றும் சோவியத் நாட்டு செம்படையின் ஒத்துழைப்பைப் பெற்ற பாடிசான் இராணுவம், தேசாபிமான போலந்து, செக்கொஸ்லாவேகியா, ஹங்கேரி, பல்கேரியா போன்ற நாடுகளில், மற்றும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிஸ அரசுகள் உருவாக்கப்பட்டன. உலகம் பூராவும் சோஷலிஸ முகாம்களும், சோஷலிஸ அரசுகளும் நிறுவப்பட்டன. சோஷலிஸ முகாம்கள் உருவாக்கப் பட்டதன் பின்னர், நலன்புரி சேவைக்ள் ஊடாக சோஷலிஸ நாடுகளின் மக்களோடு உறவுகள் பேணப்பட்டன. ஒரு புறம் சுதந்திரக் கல்வி, சுதந்திர சுகாதார சேவை, குழந்தைகளுக்கான நலன்புரி சேவைகள் முதியோருக்கான நலன்புரி சேவைகள் ஆகக் குறைந்த கட்டணத்தில் பிரயாண வசதிகள் போன்ற சமூகநலச் சேவைகள் சோஷலிஸ நாடுகளில் பரவலாகக் காணப்பட்டன. எனவேதான், சோஷலிஸம் என்பது மக்கள் நல சேவைகளை வழங்கும் சமூக முறை என கூறப்படுகின்றது. வரப்பிரசாதம் இல்லாத மக்களுக்கும், வரப்பிரசாதம் மறுக்கபட்ட மக்களுக்கும் வரப்பிரசாதம் கிடைக்க வேண்டுமென்றால் அதற்கு சோஷலிஸ



படிப்பகம்

www.padippakam.com

ம் தான் ஒரே வழி என்ற கருத்து முழு உலகத்திலும் பரவியது. இந்தக் கருத்து முதலாளித்துவ நாடுகளிலும் வலுப்பெறத் துவங்கியது. சோஷலிஸ நாடுகளில் வழங்கப்படும் சுதந்திரக் கல்வி, அந்நாடுகளில் காணப்படும் முன்னேறிய சுகாதார சேவை, போக்கு வரத்துச் சேவை, மற்றும் கலாசாரம் குறித்து உலகம் பூராவும் பேசப்பட்டது. உதாரணத்திற்கு ரஷியாவை எடுத்துக்கொள்வோம், எழுதப் படிக்கத் தெரியாத 80 வீதமான மக்களைக் கொண்டிருந்த அந்த நாடு சில தசாப்தங்களிலேயே விண்வெளிக்கும் ஆட்களை அனுப்புமளவுக்கு முன்னேற்றமடைந்தது. கலை, விளையாட்டு, விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஏற்பட்ட அபார கலாசார வளர்ச்சி கண்டு உலகமே வியப்பில் ஆழ்ந்தது. அது குறித்து பேசியது. என்றாலும், அந்த சோஷலிஸ நாடுகள் செய்தவை அனைத்தும் சரி என்று நான் கூறப் போவதில்லை. அதிகமான குறைபாடுகள் காணபப்பட்டன. அது குறித்து தனியாகப் பேச வேண்டும். என்றாலும், அந்த நாடுகள் ஆரம்பத்தில் சமூக நலன்புரிளையும், மக்களுக்கான நலன்புரிளையும் பெருமளவில் பெற்றுக் கொடுத்தன. சோஷலிஸத்திற்கு சார்ப்பான கருத்தாடல்கள் உருவாவதற்கு அந்த நலன்புரி சேவைவைகள் தான் காரணமாக அமைந்தன என்பதை மறுக்க முடியாது. எனவேதான் சோஷலிஸம் என்பது மக்கள் சார்ப்பான நிர்வாக முறை என்ற கருத்துக்கள் உலகில் முன்வைக்கப்பட்டன. சோஷலிஸம் என்பது என்ன என்று மக்களிடம் கேட்டால், "சோஷலிஸத்தின் கீழ் சமூக நலன்புரிகள், மக்களுக்கான நலன்புரிகள் பெருமளவில் கிடைக்கின்றன. இலவச சேவைகள் வழங்கப்படுகின்றன. பல்வேறு நலன்புரிகள் கிடைக்கின்றன. எனவே கட்டாயமாக சோஷலிஸம் வேண்டும்" என்பதே அவர்களது பதிலாக இருந்தது. இவ்வாறான கருத்து உலகை ஆட்கொண்டிருந்த வேளையில் தான், இந்தக் கருத்தை ஒழித்துக்கட்ட வேண்டிய தேவை முதலாளித்துவத்திற்கு ஏற்பட்டது. மட்டுமல்ல, இந்த நலன்புரி சேவைகள் ஊடாக உலக முதலாளித்துவத்திற்கு ஏற்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



நெருக்கடியை திசை திருப்பவேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதனை திசை திருப்புவதற்காக "ஜோன் மெனாட் கேன்ஸ்" என்ற பொருளியல் விஞ்ஞானி நலன்புரி முதலாளித்துவத்தை "கேன்ஸிய முதலாளித்துவம்"- என அறிமுகப்படுத்தினார். கேன்ஸிய முதலாளித்துவத்திற்குள் அரசாங்க நலன்புரிகளும் முதலாளித்துவமும் கலந்திருக்கின்றது. உதாரணமாக. சுதந்திரக் கல்வி, சுதந்திர சுகாதாரச் சேவை , குறைந்த கட்டண பிரயாணச் சேவை போன்றவற்றுக்கு அரசாங்கம் செலவிடுறது. முதியோர் நலன்புரிகள், குழந்தைகள் நலன்புரிகள், மற்றும், மாற்றுத் திறைமையுடையோருக்கான நலன்புரிகள் உள்ளிட்ட பல்வேறு நலன்புரிகளுக்கு அரசாங்கம் செலவிடுகிறது. அதுதான் கேன்ஸ ிய முதலாளித்துவத்தின் அடிப்படை அங்க லட்சனமாகும். கேன்ஸ ிய முதலாளித்துவம் பல பகுதிளைக் கொண்டது. அதில் ஒன்றுதான். உற்பத்தியை அதிகரித்தல். அதில் சிறு பொருளியல் விஞ்ஞான பிரிவொன்று இருக்கின்றது. இதைக் கூறாமல் இந்த உரையின் அடுத்த பகுதிக்குள் நுழைய முடியாது. இரண்டாவதாக, மக்களால் பொருட்களை விலை கொடுத்து வாங்க முடியதெனில், உற்பத்தியைப் பெருக்குவதால் பயன் கிடைக்கப் போவதில்லை. ஆகவேதான், மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிப்பதில் கென்ஸ ிய முதலாளித்துவம் கவனம் செலுத்துகிறது.

கென்ஸிய முதலாளித்துவத்தில் சில அடிப்படை அங்க அடையாளங்கள் இருக்கின்றன. கென்ஸிய முதலாளித்தவத்தைப் போன்றே, நலன்புரிவாத முதலாளித்தவத்திலும் மக்களுக்கு பெருவாரியான நலன்புரிகள் வழங்க வேண்டும். மக்கள் நலன்புரிகளுக்காக அரசாங்கத்தின் தலையீடு அவசியம் என்ற நியதி முன்னர் இலங்கையிலும் அமுலிலிருந்தது. அந்த அடிப்டையில் தான் சுதந்திரக் கல்வியும், சுதந்திர சுகாதார சேவையும் இலங்கையில் செயல்பட்டன. இப்போது அந்த அடிப்படையை அவர்களாகவே கைவிட்டுள்ளார்கள். மற்றது, கேன்ஸ



படிப்பகம்

www.padippakam.com

ிய முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்திக்காக அரசாங்கத்தின் தலையீடு கட்டயமாகத் தேவைப்படும். அப்படியானால், அவர்களது அடிப்டை என்ன? உற்பத்தி விடயத்தில் அரசாங்கம் தலையிடுவது. உற்பத்தியை அதிகரிப்பதிலும், முன்னேற்றுவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் அரசாங்கம் தலைடுயிடுவது. ஆகவே, தனியார் துறையோடு ஒப்பிடும்போது பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்களிப்பு அதிகம். கென்ஸிய முதலாளித்துவத்தின் அடிப்படை என்னவெனில், உற்பத்தியை எவ்வளவு தான் அதிகரித்தாலும் மக்களுக்கு வாங்கும் சக்தி இல்லையென்றால், அதனால் பலன் கிடைக்காது என்பதே. எனவே, மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக கேன்ஸிய முதலாளித்துவம் தலையீடு செய்தது. இந்த கெள்ஸிய முதலாளித்துவம் 1970 களில் குறிப்பிட்டளவு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. பல்வேறு நலன்புரி சேவைகளை வழங்கும் நாடுகள் இருந்தன. பொருளாதாரத் துறையில் அரச தலையீட்டைக் கொண்ட நாடுகளும் இருந்தன. அந்த முதலாளித்துவ நாடுகள் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டன. அந்த நெருக்கடிக்குக் காரணம் என்னவென்றால், இந்த நலன்புரிவாத முதலாளித்துவ முறைக்குள் , மூலதனம் எல்லா இடங்களுக்குள்ளும் நுழையவும், நிலைத்திருக்கவும், வியாபிக்கவும் இருந்த வசதிகள் இல்லாமலாகியமை. பரவலாவதன் மூலமாகவே மூலதனம் நிலைத்திருக்கும். அதற்கான வசதிகள் குறைந்து விட்டிருந்தன. எல்லா இடங்களுக்குள்ளும் நுழையக் கூடிய வசதிகள் மூலதனத்திற்கு இல்லாமலாகியது. உலக மூலதனம் ஒரே இடத்தில் தேங்கி நின்றது.

அந்த நலன்புரிவாத முறைக்குள் அரசாங்க கட்டுப்பாடும் இருந்தது. ஆகவே, அந்தந்த அரசாங்கங்களுக்கே உரித்தான பல்வேறு சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள், எல்லைகள் இருந்தன. அந்தந்த எல்லைகளைப் பாதுகாத்தவாறே முதலாளித்துவம் நிலைத்திருந்தது. என்றாலும், 1970களின் ஆரம்பக் கட்டத்தில்



படிப்பகம்

www.padippakam.com



முதலாளித்துவத்திற்கு தொடர்ந்தும் நிலைத்திருக்க முடியாத நிலை தோன்றியது. என்றாலும், அதற்கு எல்லா இடத்திலும் சுதந்திரமாக நுழையவேண்டிய தேவை இருந்தது. தோழர் மார்க்ஸின் கம்யூனிஸ அறிக்கை என்ற நூலில் கூறப்பட்டுள்ளவாறு, எல்லா இடங்களிலும் நுழைந்து, குடியேறி. சுரண்டவேண்டிய தேவை முதலாளித்துவத்திற்கு ஏற்பட்டது. கேன்ஸிய முதலாளித்துவ முறை அதற்குத் தேவையான அடிப்படையைத் தயாரித்திருக்கவில்லை. எனவே, மூலதனக் குறைவு பாரிய பொருளாதார நெருக்கடியாக மாறியது. 1973 ல் பாரிய பொருளாதார நெருக்கடியொன்று உலகை ஆக்கிரமித்துக் கொண்டதோடு, உலகின் பெரும்பாலான நாடுகளில் பொருளாதாரம் சரிந்தது. கேன்ஸிய பொருளாதாரத்தின் தோல்வியைக் குறிக்கும் அடையாளமாகவே பொருளாதார நிபுணர்கள் அதனைக் கண்டனர். ஆகவே, அனைத்து பகுதிகளுக்கும், புதிய முறையில் சுலபமாக நுழையக் கூடிய வசதிகள் மூலதனத்திற்குத் தேவைப்பட்டது. எனவே, ஒவ்வொரு நாடுகளினதும் எல்லைகள், வியாபாரத்திற்காக விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.. அதற்குப் மாற்றீடாக புதிய பொருளாதார முறையொன்று தேவைப்பட்டது. இந்நிலையில் தான் ,1975 செப்டம்பர் 24 ம் திகதி அன்றைய உலக வங்கியின் தலைவராக இருந்த ரொபட் மக்னமாரா நைரோபியில் உரையாற்றுகிறார். "மக்னமாராவின் நைரோபி உரை" என அது பிரசித்தம் பெற்றிருந்தது. அந்த உரையின்போது, பழைய நலன்புரிவாத முதலாளித்துவத்தினால் தொடர்ந்தும் முன்செல்ல முடியாது. முதலாளித்துவத்திற்கு. ஆயிரம் புதிய திருப்பங்கள் தேவை. புதிய முறையொன்று தேவை என்று கூறினார். அதுதான் புதிய லிபரல்வாதம் என அறிமுகப் படுத்தினார். அந்த புதிய லிபரல்வாதம் குறித்து அவருக்கு முன்பே மில்டன் பராய்ட்மன் போன்ற பொருளாதார நிபுணர்கள் புதிய லிபரல்வாத முறை குறித்து கதைததிருக்கிறார்கள். ஆனால். ரொபட் மக்னமாராவின் நைரோபி உரையின்போதுதான் மூலதனம்



படிப்பகம்

www.padippakam.com

விரிவாக்கப்படுவதற்கு, புதிய பொருளாதார முறையொன்றின் தேவை குறித்து பேசப்பட்டது. இந்த உரையின்போது குறிப்பிடப்பட்ட புதிய லிபரல்வாதம் பல பிரிவுகளை கொண்டது. புதிய லிபரல்வாதம் என்பது என்னவென்று யாராவது கேட்டால், அதற்கு பதிலாக கூறக் கடிய பல்வேறு அம்சங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் இந்த அனைத்து நாடுகளும், தமது நாடுளில் உலக மூலதனத்திற்கு கட்டுப்பாடின்றின்றி இடமளிக்க வேண்டுமென்தென்பதாகும். இலங்கை போன்ற நாடுகளில் இது திறந்த பொருளாதாரம் என அழைக்கப்படுகிறது. ஏகபோக மூலதனத்திற்காக பல நாடுகள் தாராளமாக இடமளித்தன. அதே போன்று தொழிலாளர் உரிமைகளையும் சமூக பாதுகாப்பு சட்டங்ளையும் ரத்துச்செய்தன. இலங்கையைப் போன்ற நாடொன்றை எடுத்துக்கொண்டால், இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன, அங்கு சாதாரண தொழிற் சட்டங்கள் மதிக்கப்படமாட்டாது. தொழிற் சங்கங்களை அமைக்கும் சட்டங்கள் கூட செல்லுபடியாகாது. பெண்களிடம் இரவு நேர வேலை வாங்குவதில் அமுல் படுத்தப்படும் கட்டுப்பாடுகள் கூட எடுபடுவதில்லை. வர்த்தக வலயத்தில் பணியாற்றும் பெண்கள் கழிவறைக்குச் செல்வதற்குக் கூட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. சிறு அட்டையொன்று இருக்கின்றது. எத்தனை முறை கழிறைக்குச் சென்றார்கள் என்று அதில் குறிக்கப்பட வேண்டும். குறிக்கப்பட்டுள்ளதற்கும் அதிகமான முறை சென்றால் சம்பளத்திலிருந்து வெட்டப்படுகிறது. அல்லது பதவி உயர்வுக்கான புள்ளிகள் குறைக்கப்படுகிறது. எனவேதான், சுரண்டலை அதிகரிப்பதற்காக சாதாரண தொழிற் சட்டங்கள் மற்றும் மனிதநேய உரிமைகள் கூட மீறப்படும் விதத்தில் சட்டங்களை ரத்துச் செய்வதை புதிய லிபரல்வாதம் பிரேரிக்கிறது. அதேபோன்று, சமூக பாதுகாப்பிலிருந்தும் அரசாங்கம் விலகிக் கொள்ளவேண்டும் எனக் கூறுகிறது. புதிய லிபரல்வாதம் அமுல்படுத்தப்பட்ட அனைத்து இடங்களிலும் கல்வி. சுகாதாரம் போக்குவரத்து, முதியோர்



படிப்பகம்

www.padippakam.com



நலன்புரி, சிறுவர் நலன்புரி, மற்றும் வேறு சமூக பாதுகாப்புச் சேவைகளிலிருந்து அரசாங்கததின் தலையீடு குறைக்கப்படுகிறது. உற்பத்தித் துறைக்கான அரசாங்கத்தின் தலையீட்டை கூடுமானவரை குறைத்து சேவைகளை விரிவாக்குகின்றது. எனவே ,உற்பத்தி பொருளாதாரத்திற்கும் மேலாக சேவைகள் பொருளாதாரம் முன்னேற்றமடைகிறது.

எனவே, இந்த உற்பத்திப் பொருளாதாரம், சேவைகள் பொருளாதாரம் என்று கூறுவது தெளிவில்லையாயின், அதனை தெளிவுபடுத்திக்கொள்ள சிறந்த உதாரணம்தான், சில நாட்களுக்கு முன்னர் நீர்கொழும்பில் நடந்த சம்பவம். உல்லாசப் பிரயாணிளைக் கவரும் நோக்கில் நீரில் தரை இறக்கக் கூடிய விமானங்ளை (சீ ப்லான்") நீர்க்கொழும்பு வாவியில் தரையிறக்குவதற்காக வாவியில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டது. மீன் பிடிக்கும் உரிமையை அரசாங்கம் பறித்தது. உல்லாசப் பிரயாணத் துறைக்காக அரசாங்கம் மீன்பிடித் தொழிலை பலியிட முயற்சித்தது. நீர்க்கொழும்பு வாவியில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களின் கடுமையான போராட்டத்தின் பின்னர் மீண்டும் மீன் பிடிக்கும் உரிமை பெற்றுக்கொள்ளப்பட்டது. பொருளாதாரத்தை விஞ்ஞான ரீதியாக எடுத்துக்கொண்டால், சேவைகள் பொருளாதாரத்திற்குப் பதிலாக உற்பத்திப் பொருளாதாரம் பலியிடப்படுகிறது. இதுதான். புதிய லிபரல்வாதம் இது ஒன்றும் புதுமையானதல்ல புதிய லிபரல்வாதக் கொள்கை அதுதான். ரொபட் மக்னமாரா தனது நைரோபி உரையின்போது இதைத்தான் குறிப்பிட்டார். இவ்வாறான அடையாளங்ளைக் கொண்ட பொருளாதாரத்திற்குத்தான் புதிய லிபரல்வாத பொருளாதாரம் என்று கூறப்படுகிறது. 1970களின் கடைசிப் பகுதியில் இந்த புதிய லிபரல்வாத பொருளாதாரம் ஸ்தாபிக்கப்பட்டது. உலக ரீதியில் எடுத்துக்கொண்டால், அமெரிக்காவில் ரொனால்ட் ரேகன் பதவிக்கு வந்த பின்னரும், பிரித்தானியாவில் மார்கரட் தச்சர் பதவிக்கு வந்த பின்னரும் புதிய



படிப்பகம்

www.padippakam.com



நலன்புரி, சிறுவர் நலன்புரி, மற்றும் வேறு சமூக பாதுகாப்புச் சேவைகளிலிருந்து அரசாங்கததின் தலையீடு குறைக்கப்படுகிறது. உற்பத்தித் துறைக்கான அரசாங்கத்தின் தலையீட்டை கூடுமானளவு குறைத்து சேவைகளை விரிவாக்குகின்றது. எனவே ,உற்பத்தி பொருளாதாரத்திற்கும் மேலாக சேவைகள் பொருளாதாரம் முன்னேற்றமடைகிறது.

எனவே, இந்த உற்பத்திப் பொருளாதாரம், சேவைகள் பொருளாதாரம் என்று கூறுவது தெளிவில்லையாயின், அதனை தெளிவுபடுத்திக்கொள்ள சிறந்த உதாரணம்தான், சில நாட்களுக்கு முன்னர் நீர்கொழும்பில் நடந்த சம்பவம். உல்லாசப் பிரயாணிளைக் கவரும் நோக்கில் நீரில் தரை இறக்கக் கூடிய விமானங்ளை (சீ ப்லான்") நீர்க்கொழும்பு வாவியில் தரையிறக்குவதற்காக வாவியில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டது. மீன் பிடிக்கும் உரிமையை அரசாங்கம் பறித்தது. உல்லாசப் பிரயாணத் துறைக்காக அரசாங்கம் மீன்பிடித் தொழிலை பலியிட முயற்சித்தது. நீர்க்கொழும்பு வாவியில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களின் கடுமையான போராட்டத்தின் பின்னர் மீண்டும் மீன் பிடிக்கும் உரிமை பெற்றுக்கொள்ளப்பட்டது. பொருளாதாரத்தை விஞ்ஞான ரீதியாக எடுத்துக்கொண்டால், சேவைகள் பொருளாதாரத்திற்குப் பதிலாக உற்பத்திப் பொருளாதாரம் பலியிடப்படுகிறது. இதுதான். புதிய லிபரல்வாதம் இது ஒன்றும் புதுமையானதல்ல புதிய லிபரல்வாதக் கொள்கை அதுதான். ரொபட் மக்னமாரா தனது நைரோபி உரையின்போது இதைத்தான் குறிப்பிட்டார். இவ்வாறான அடையாளங்ளைக் கொண்ட பொருளாதாரத்திற்குத்தான் புதிய லிபரல்வாத பொருளாதாரம் என்று கூறப்படுகிறது. 1970களின் கடைசிப் பகுதியில் இந்த புதிய லிபரல்வாத பொருளாதாரம் ஸ்தாபிக்கப்பட்டது. உலக ரீதியில் எடுத்துக்கொண்டால், அமெரிக்காவில் ரொனால்ட் ரேகன் பதவிக்கு வந்த பின்னரும், பிரித்தானியாவில் மார்கரட் தச்சர் பதவிக்கு வந்த பின்னரும் புதிய



படிப்பகம்

www.padippakam.com

லிபரல்வாதம் செயல்படத் துவங்கியது. ஒவ்வொரு நாட்டிலும் இதற்கு வெவ்வேறான பெயர்கள் இருக்கின்றன. அமெரிக்கா இதனை "ரேகன்வாதம்" என அழைக்கின்றது. பிரித்தானியாவில் "தச்சர்வாதம்" என அழைக்கப்படுகின்றது. எனவே, 80களில், ரேகன்வாதம், தச்சர்வாதம் என்ற பெயர்களில் முதன் முதலாக இது தலைகாட்டியது.

இதில் மேலும் ஒரு ஆச்சரிய சம்பவம் நிகழ்ந்தது. 1975ல் ரொபட் மக்னமாரா நைரோபியில் நிகழ்த்திய தனது உரையில் நலன்புரிவாத அரச தலையீட்டைக் கொண்ட பொருளாதாரம் இனிமேலும் கிடையாது: மூலதனத்திற்கு பரவலாகும் உரிமை வேண்டாம் எனக் கூறும்போது, இலங்கையில் அப்போது நிதிமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக அதற்குச் சமமான உரையொன்றை நிகழ்த்தினார். 70-77 பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் என்.எம். பெரேரா போன்ற இடதுசாரித் தலைவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறியதன் பின்னர், நிதியமச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக, " இலங்கையில் நடைமுறையிலுள்ள மக்கள் மயம், சுதந்திரக் கல்வி, சுதந்திர சுகாதாரச் சேவைகளுடன் பொருளாதாரத்துக்கான தொழில் துறைகளில் அரசாங்கத்தின் தலையீடு கூடாது, அந்தப் பொருளாதார முறையோடு முன்னேற முடியாது. எனவே, வெளிநாட்டு முதலீடுகளை தாராளமாக வரவேற்க வேண்டுமென்றார்.

நைரோபி உரையைக் கேட்ட பின்னர்தான் அவர் இவ்வாறானதொரு உரையை நிகழ்த்தினாரா என்பதில் தெளிவில்லை. எனினும், இந்த புதிய லிபரல்வாதத்தின் தேவை குறித்து உலகில் பேசப்படும் நேரத்திலேயே இலங்கையிலும் அதற்கான தேவை ஏற்பட்டது. இந்த புதிய லிபரல்வாதம் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகவினால் இலங்கையில் சரியான முறையில் ஸ்தாபிக்க முடியவில்லை. ஜே. ஆர்.ஜயவர்தன தான் புதிய லிபரல்வாத்தின் முதலாவது கட்டத்தை இலங்கையில் ஆரம்பித்து வைத்தவர்



படிப்பகம்

www.padippakam.com



1977ல் அதிகாரத்துக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்தன, இலங்கையின் பொருளாதாரக் கொள்கையை 1978 லிருந்து புதிய லிபரல்வாதத்தை நோக்கி இட்டுச் சென்றார். பொருளாதாரத்தில் புதிய லிபரல்வாத மீளமைப்பைக் கொண்டு வந்தார். அமெரிக்காவில் ரேகன்வாதம், பிரித்தானியாவில் தச்சர்வாதம் என்பது போல் இலங்கையில் ஜே.ஆர். வாதம் என்று கூறவில்லை. திறந்த பொருளாதாரம் எனறே அதனை அழைத்தனர். வார்த்தை தவறாக இருந்தாலும், திறந்த பொருளாதாரம் என்றுதான் நாம் அதனைக் கூறுகிறோம். புதிய லிபரல்வாத மீளமைப்பை மேற்கொள்ள பலமான அதிகாரம் வேண்டும். எனவே . விளையாட்டுத் துறையின் அனைத்து சட்டதிட்டங்ளையும் உடைத்தெறிந்து விட்டே முதலாவது கட்டத்துக்குள் ஜே.ஆர். பிரவேசித்தார். அதாவது, எல்லையற்ற அதிகாரத்தை தன் வசம் வைத்துக் கொண்டு, எதிர்கட்சியை ஆதரித்த விளையாட்டு வீரர்களின் கை கால்ளை உடைத்து. அவர்களை மைதானத்தை விட்டு விரட்டியடித்து, நீதிபதிகளை பணத்துக்கு வாங்கி, இப்படித்தான் தனது முதல் கட்டத்தை ஆரம்பித்தார் ஜே.ஆர்.ஜயவர்தன. 1978 நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்துடனான அரசியல் சாஸனத்தை கையில் வைத்துக் கொண்டு வேலையை துவங்கினார்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறை எப்படிப்பட்டது என்றால், அதன் மூலம் ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மட்டுமே மாற்ற முடியாது. அதைத் தவிர எதை வேண்டுமானாலும் செய்ய அதிகாரம் உண்டு. அதாவது பாலியல் மாற்றத்தை மட்டுமே செய்ய முடியாது. நாம் பாடசாலையில் அரசியல் விஞ்ஞானம் கற்கும்போது இப்படித்தான் கூறுவார்கள். அரசின் மூன்று பிரதான அதிகாரங்கள் எனக் கூறப்படுவது நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கச் சபை, நீதிமன்றம் ஆகியனவாகும். அதாவது ஜனநாயகத்தின் அடிப்படையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவை ஒரு தனி மனிதரின் கைக்குள்



படிப்பகம்

www.padippakam.com

அடங்கக் கூடாது. அதிகாரம் பலரிடத்தில் பிரிந்துச் செல்ல வேண்டுமென்று. ஆனால் இலங்கையில் அப்படியல்ல. இலங்கயை எடுத்துக் கொண்டால், நிறைவேற்று அதிகாரம் தனி நபரின் கையில் இருக்கிறது. ஜனாதிபதியின் கையில் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. அமைச்சர்களை நியமிப்பது, அமைச்சர்ளை நீக்குவது, அமைச்சரவையைக் கலைப்பது போன்ற அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதியின் கையில் இருக்கின்றது.

சட்டவாக்கச் பையின் அதிகாரம் ஜனாதிபதியின் கையலேயே இருக்கின்றது. நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்டுவது, கூட்டத்தொடரை முடித்துவைப்பது, கூட்டத் தொடரில் ஆரம்ப உரையாற்றுவது, நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் அதனை கலைத்துவிடுவதற்கான அதிகாரம் ஆகிய நாடாளுமன்றத்தை ஒழுங்கு படுத்துதல் தொடாப்பிலானதும், சட்டவாக்கச் சபை தொடர்ப்பிலானதுமான அனைத்து அதிகாரங்களும் ஜனாபதிவசமே இருக்கின்றன. சட்டவாக்கச் சபை, நிறைவேற்று அதிகாரம் மட்டுமல்ல, நீதிமன்றத்தின் அதிகாரமும் ஜனாதிபதியின் கையலேயே உள்ளது. எமது நாட்டின் அரசியல் சாஸனத்துக்கு ஏற்ப உச்ச நீதிமன்ற நீதிபதிளை நியமித்தல், உயர் நீதிபதியை நியமித்தல் போன்ற அதிகாரங்களும் ஜனாதிபதியிடமே உள்ளன. மேன் முறையீட்டு நீதிம்ன்றத்தின் தலைவரை நியமிக்கும் அதிகாரமும், சட்டமா அதிபரை நியமிக்கும் அதிகாரமும் அவரிடம் உள்ளது. இந்த அரசாங்கத்தில் சட்டமா அதிபர் திணைக்களமும் ஜனாதிபதியின் கீழேயே இருக்கின்றது. எனவே, நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களும் தனி நபரின் கையிலேயே அடங்கியுள்ளது. நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கச் சபை, நீதிமன்றம் போன்ற அரசாங்கத்தின் அனைத்து அதிகாரங்ளையும் தன்வசம் வைத்துக்கொண்டுதான் ஜே. ஆர். தனது முதலாவது கட்டத்தை விளையாட ஆரம்பித்தார்.

மறுபக்கம், 77தேர்தலில் கிடைத்த 6/5 பலத்தை வைத்துக்



படிப்பகம்

www.padippakam.com



கொண்டு வேலையைத் துவங்கினார். தனது கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களிடமிருந்து பதவி விலகும் இராஜினாமா கடிதங்களை வாங்கி தனது பாக்கட்டுக்குள் வைத்துக் கொண்டார். ஒட்டு மொத்த அதிகாரங்ளையும் தன்வசம் வைத்திருந்தும் கூட, எதிர்க்கட்சித் தலைவரின் பிரஜாவுரிமையைப் பறித்தார், எதிர்க் கட்சியை மட்டந்தட்டுவதில் முனைப்புடன் செயலபட்டார். 1983 கருப்பு ஜூலையைப் பயன்படுத்தி மக்கள் விடுலை முன்னணி உள்ளிட்ட இடதுசாரி அரசியல் கட்சிகள் உள்நாட்டில் அரசியலில் ஈடுபடும் உரிமயை மறுதலித்தார். அரசியல் சாஸன திருத்தத்தின் ஊடாக தமிழர் விடுலை ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை ரத்துச் செய்தார். எதிர்க் கட்சியைச் சார்ந்த விளையாட்டு வீர்ரகளின் கைகால்களை உடைத்து, அல்லது அவர்களை மைதானத்தை விட்டும் விரட்டியடித்துவிட்டு தனது விளையாட்டை ஆரம்பித்தார். ஆகவே, இந்த முதல் கட்ட விளையாட்டை எடுத்துக்கொண்டால், அதில் பல விடயங்கள் காணப்பட்டன. அவற்றை விவரிக்க எமக்கு நேரம் போதாது. என்றாலும், ஜயவர்தன அவர்களின் சித்து விளையாட்டினால் இலஙகையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் குறித்தும் பேசத்தான் வேண்டும். அதற்காக அவர் விஷேட நிர்வாக முறையொன்றை அமைத்தார். பாரிய கொழும்பு பொருளாதார வலயம் போன்ற விஷேட நிர்வாக கட்டமைப்பை உருவாக்கினார். விஷேட பொருளாதார வலயங்ளை அமைத்தார். இலங்கையின் பொதுச் சட்டத்துக்கு மதிப்பளிக்காத சுதந்திர வர்த்தக வலயம் போன்ற விஷேட வலயங்ளை அமைத்தார். எனவே, இலங்கையின் சாதாரண தொழிலாளர் சட்டம் அங்கு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. பின்னர் அரச தொழிற் துறைகளை தனியார்மயப்படுத்தும் முயற்சியில் இறங்கினார். சேவைகளிலிருந்து அரசு விலக முயற்சிக்கப்பட்டது. ஆனால், மக்களின் எதிர்ப்பு காரணமாக அது வெற்றியளிக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வளவுக்கும் மத்தியில் மக்களை வசியப்படுத்வதற்காக பாரிய அபிவிருத்தித் திட்டங்ளை ஆரம்பித்தார். மகாவலி திட்டத்தை துரித மகாவலி திட்டமாக மாற்றினார். பாரிய நீர்த்தேக்கங்கள், மின்சார உற்பத்தி, விவசாயம் போன்ற பல்வேறு பாரிய திட்டங்ளை செயல்படுத்தினார். அவற்றின் ஊடாக நாடு துரித கதியில் அபிவிருத்திடைவதாகக் காட்ட முயன்றார். அதேபோன்று, நாட்டின் அபிவிருத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த, பொருளாதார அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தில் ஒரு பகுதி அடிப்படை வசதிகளுக்காக பயன்படுத்தப்பட்டது. பாதைகள், பாலங்கள் போன்ற அபிவிருத்தி வேலைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இப்படித்தான் முதலாவது இன்னிங்ஸ் ஆரம்பமாகியது. உலகத்தைப் பொறுத்த வரையிலும், இலங்கயை பொறுத்தவரையிலும் இது புதிய லிபரல்வாதத்தின் ஆரம்பம் மாத்திரமே.

இப்போது இரண்டாவது கட்டத்தைப் பற்றி பேசவேண்டும். இரண்டாவது கட்டத்தைப் பற்றி பேசவேண்டிய நிலை ஏற்பட்டது ஏன்? இந்த, புதிய லிபரல்வாதம் ' ரொபட் மக்னமாராவின் நைரோபி உரையின் பின்னர அசுர பலத்துடன ஆரம்பிக்கப்பட்டாலும், அந்த வேகத்தோடு செயல்பட முடியவில்லை. உலகின் சோஷலிஸ முகாம்கள் அதற்குத் தடையாக இருந்தன. உலகின் நிலப்பரப்பில் 1/6 பகுதி சோஷலிஸ முகாமின் பிடியில் இருந்தது. சோஷலிஸ முகாமின் ஆதரவைப் பெற்ற, சோஷலிஸ முகாமுக்கு சார்ப்பான முதலாளித்துவ அரசுகளும் இருந்தன. அவற்றில் இந்த புதிய லிபரல்வாதத்தை செயல்படுத்த முடியவில்லை. அதனால்தான், உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் உலக மூலதனத்தை நுழைக்க முயற்சி செய்த போதும், பாதியைத்தான் நுழைவிக்க முடிந்தது. முழுமையாக நுழைவிக்க முடியவில்லை. ஆகவே புதிய லிபரல்வாதத்தின் முதல் கட்டம் என்பது பாதிதான். முதல் கட்டம் முழுமையாகவில்லை. புதிய லிபரல்வாதத்தின் மீளமைப்பும்



படிப்பகம்

www.padippakam.com



முழுமையாகவில்லை. இலங்கையிலும் இதே நிலைதான்.

ஜயவர்தன அவர்கள் இலங்கையில் புதிய லிபரல்வாதத்தின் மீளமைப்பை ஆரம்பித்தாலும், இலங்கையில் அதனை முழுமையாக அமுல்படுத்த முடியவில்லை. ஒரு புறம் 84-85 லிருந்து மக்கள் போராட்டங்கள் தொடர்ந்தன. அக்கால கட்டத்தில் மக்கள் போராட்டமொன்று நிலவியது. மக்கள் விடுலை முன்னணி பங்கேற்ற போராட்டம். அதன் பிரதான கோஷம் திறந்த பொருளாதாரத்திற்கு எதிரானதாவே இருந்தது.. எனவே, மீளமைப்பை செயல்படுத்த முடியாத அளவுக்கு மக்கள் எதிர்ப்பு தீவிரமாக இருந்தது. மறுபுறம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீண்ட யுத்தம் நடந்துக்கொண்டிருந்து. ஆகவே, நாட்டில் 1/3 பகுதிக்கு புதிய லிபரல்வாத மீளமைப்பை எடுத்துச்செல்ல முடியாத நிலை இருந்தது. நாம் இன்று யாழ்ப்பாணத்திற்கோ, கிளிநொசிசிக்கோ, அல்லது மன்னாருக்கோ பயணிக்கும்போது, 1970 களில் இலங்கை எப்படி இருந்ததோ, இன்றும் அப்படியே இருப்பதைக் காணமுடியும். நவ தாராளமயம் இப்போது தான் அப்பகுதிக்குள் காலடி வைத்துக் கொண்டிருக்கின்றது. அன்றைய நிலையில் ஜே.ஆர் ,ஜயவர்தனா அவர்களால் கூட நவ தாராளமயத்தை நாடு முழுவதும் முழுமையாக செயல்படுத்த முடியவில்லை. 1991ன் பின்னர் உலக சோஷலிஸ முகாம் வீழ்ச்சியடைந்தது. அதன் பின்னர் புதிய லிபரல்வாதம் பரவலாவதற்கு இருந்த தடைகள் நீங்கின. தடைகள் நீங்கியதன் காரணமாக ஏகாதிபத்தியவாதிகள் உலகளவில் புதிய லிபரல்வாதத்தை நிலை நிறுத்துவதில் தீவிரமாகச் செயல்பட்டனர். அதைத்தான் "புதிய உலக முறை" என ஜார்ஜ் புஸ் கூறினார். அவர் கூறிய "புதிய உலக முறை" என்பது வேறொன்றுமல்ல, ஒரு தனி நபரின் கையில் ஒட்டு மொத்த அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு உலக மூலதனத்தை பரவலாக்குவதற்கு ஏதுவாக ஏகாதிபத்திய பலத்தை உறுதிசெய்வது. சில வேளைகளில், உடன்பாடுகளின் ஊடாகவும், சிலவேலைகளில் பலவந்தமாகவும்



படிப்பகம்

www.padippakam.com

செயல்படுவதற்காகவே அதனை ஆரம்பித்தனர். அதன்போதுதான், இந்த புதிய புதிய லிபரல்வாதத்தின் இரண்டாவது இனனிங்ஸ் குறித்து பேச்சுக்கள் உலகளவில் ஆரம்பமாகின. சோஷலிஸ முகாம் வீழ்ச்சிடைந்ததன் பின்னர் இதனை முழுமையாக செயல்படுத்தக் கூடியதாக இருந்தது.

ஒரு சிலர் கூறியிருக்கிறார்கள், பத்திரிகையில் பார்த்தேன், புதிய லிபரல்வாதத்தின் இரண்டாவது கட்டம்" என்பது யார் யாரோ கண்டு பிடித்ததை இவர்கள் திருடியிருக்கிறார்கள் என்று. நவ தாராளமயத்தின் இரண்டாவது கட்டம் தொடர்ப்பிலான பேச்சுக்கள் உலகம் பூராவும் இருந்ததுதான். 1991ல் சோஷலிஸ முகாம் வீழ்ந்ததன் பின்னர், பலவேறு மேற்கத்திய நிபுணர்கள் மற்றும் இடதுசாரி புத்திஜீவிகள் ஆகியோர், ஏற்பட்டுள்ள புதிய நிலமைகள் குறித்து உரையாடியுள்ளனர். நோம்சோம்ஸ்கி போன்றவர்கள், ஜேம்ஸ் பெட்ராஸ் போன்றவர்கள் இது குறித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். ஜேம்ஸ் பெட்ரோஸ் இதனை "NEO LIBERAL BARBARISM" அல்லது " புதிய லிபரல்வாத்தின் மிலேச்ச யுகம்" என்று கூறியுள்ளார். புதிய லிபரல்வாதத்தை உறுதி செய்வதற்காக காட்டுமிராண்டித்தனமான யுத்தங்கள் பயன்படுத்தப்பட்டன. எனவே, ஆப்கான் ஆக்கிரமிப்பு, ஈராக் ஆக்கிரமிப்பு, இப்போது லிபியா மீதான ஆக்கிரமிப்பு. இவ்வ அனைத்தும் உள்ளடக்கப்பட்டு புதிய லிபரல்வாதத்தின் புதிய மிலேச்ச யுகம் என இது அழைக்கப்படுகிறது. ஆகவே, அந்த இரண்டாவது கட்டத்தின் கோட்பாடு யாருடைய பரம்ரை சொத்துமல்ல. அது உலக அரசியல் இலக்கியத்தின் கோட்பாடாகும். நம் அனைவருக்கும் சோஷலிஸம் தேவையென்றால். இது குறித்து கதைப்பது நல்லது. நாம் அதற்காக சந்தோசப்பட வேண்டும். சோஷலிஸம் எனது கண்டுபிடிப்பு. யாரும் அதைப் பற்றி கதைக்கக் கூடாது, என்று மார்க்ஸோ ,ஏங்கள்ஸோ, லெனினோ கூறவில்லை.

ஆகவே, புதிய லிபரல்வாதத்தின் இரண்டாவது இன்னிங்ஸ்



படிப்பகம்

www.padippakam.com



இப்போது ஆரம்பமாகியுள்ளது. அவ்வாறான ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உலகில் பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ இரண்டாவது முறை பதவிக்கு வந்ததன் பின்னர், இலங்கையில் இதனை ஸ்தாபிக்கத் துவங்கினார். அதற்குத் தேவையான அனைத்து நிலைகளும் தயாராவே இருந்தன. யுத்தம் முடிவுக்கு வந்திருந்தது. 35 வருடகாலம் ஒரே நிலையில் வாழ்ந்திருந்த மக்கள் புதிய லிபரல்வாத கலாசாரத்திற்கும் புதிய லிபரல்வாதத்தின் மாதிரிக்கும் படிப்படியாக மாறியிருந்தனர். ஆகவே, இதன் எஞ்சியிருந்த பகுதியை ஆரம்பிப்பதற்கான பின்னணி தயாராவே இருந்தது.

மஹிந்த ராஜக்பக்ஷ இரண்டாவது முறை வெற்றி பெற்றதன் பின்னர் 2010 ல் இரண்டாவது கட்டத்தை ஆரம்பித்தபோது, முதலாம் கட்டத்துக்கும் இதற்கும் இடையில் தொடர்ப்பும். ஒற்றுமையும் இருப்பது தெரிந்தது. ஜயவர்தன செய்ததையே ராஜக்பக்ஷவும் செய்கிறார். முதலாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டதைப் போன்றே இரண்டாவது கட்டமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சக்திவாய்ந்த ஜனாதிபதி பதவியொன்றை நிர்மானித்து, எல்லாவித ஜனநாயக சட்ட திட்டங்களையும் ஒழித்துகட்டியதன் பின்னரே முதலாவது கட்டம் துவங்கியது. 17வது அரசியல் சாஸனத் திருத்தம் என்பதெல்லாம் அவ்வளவு பலம் வாய்ந்ததல்ல. 18வது அரசியல் சாஸனத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஏகாதிபத்தியவாதத்துக்குள் நுழைவதை ஓரளவாவது தடுக்கக் கூடியதும், மக்களால் பாதுகாக்கப்பட்டதுமான சில திருத்தங்களை இல்லாதொழிப்பதற்கான திருத்தங்கள் அதில் அடங்கி இருந்தன.

ஜயவர்தன நிறவேற்று ஜனாதிபதி முறையைக்கொண்டு வந்தார். ராஜபக்ஷ 18வது அரசியல் சாஸன திருத்தத்தின் ஊடாக மிகச் சக்தி வாய்ந்த பதவியாக அதனை மாற்றினார். நாடாளுமன்றத்தில் 5/6 பலத்தை வைத்துக்கொண்டு முதலாவது இன்னிங்ஸ் ஆரம்பிக்கப்பட்டது., நாடாளுமன்றத்தில் 3/2 பலத்தை



படிப்பகம்

www.padippakam.com

வைத்துக்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸ் ஆரம்பிக்கப்பட்டது. அந்த 3/2 மக்களால் கொடுக்கப்பட்டதல்ல. மக்களால் தேர்நதெடுக்கப்பட்ட உறுப்பினர்ளை விலைக்கு வாங்கியதனால் கிடைத்த பலம். சிலரது ஊழல், மோசடிகள், முறைகேடுளைக் காட்டி பயமுறுத்தி, வாங்கப்பட்ட பலம். அமைச்சர் பதவி, பணம், வரப்பிரசாதங்கள் கொடுத்து வாங்கப்பட்ட பலம். பயமுறுத்தியும், விலைகொடுத்தும் வாங்கிய உறுப்பினர்ளைக் கொண்டு அமைத்துக்கொண்ட பலம். ஜயவர்தனவிடம் உறுப்பினர்களின் கேட்டு விலகும் ராஜினாமா கடிதங்கள் இருந்தன. ராஜபக்ஷவிடம் உறுப்பினர்களின் ஊழல், மோசடிகளின் ஆதாரத்துடனான கோவை இருக்கின்றது.

எதிர்க் கட்சித் தலைவியின் பிரஜா உரிமயை பறித்த பின்னர் முதலாவது கட்டம் ஆரம்பமாகியது. தனது பிரதான எதிராளியான சரத் பொனசேகவை சிறையில் தள்ளிய பின்னர் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்தார் ராஜபக்ஷ. எதிர்தரப்பு வீரர்களை கட்டிப் போட்டுவிட்டே இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்குள் ஜனநாயகத்தைக் கேட்பது கேலிக்கூத்தாகும். ஜனநாயத்திற்கு விரோதமான முறையிலேயே புதிய லிபரல்வாதம் நிலை நாட்டப்படுகிறது. முதல் கட்டத்தில் சுதந்திர வர்த்தக வலயம் போன்ற விஷேட வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரண்டாம் கட்டத்திலும் வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சமீபத்தில் சூதாட்ட அநுமதிக்கான சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டு விஷேட சூதாட்ட வலயங்கள் அமைக்கப்பட்டன. கொழும்பு டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை சூதாட்ட வலயமாக்கப்பட்டு, அதனை கஸினோ என்று கூறப்படும் சூதாட்டதிற்காக ஒதுக்கப்பட்ட பிதேசமாக்கும் நோக்கில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அது தற்போது சட்டபூர்வமான சூதாட்ட வலயம். இந்த சூதாட்ட வலயத்துக்குள் இலஙகையின் பொதுச் சட்டம் செல்லுபடியாகாது. தற்போது வர்தமானி மூலம் களுத்றையில் நிர்வாண வலயங்களுக்கான



படிப்பகம்

www.padippakam.com



சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பொதுவாக, இலங்கையில் நிர்வாணமாக நடப்பது குற்றம். உல்லாசப் பிரயாணிகளுக்காக விபச்சாரத் தொழிலுக்கு இடமளிக்க, அதற்கு ஊக்கமளிக்க களுத்துறையில் நிர்வாண வலயமொன்று வர்த்மானி மூலம் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வலயத்துக்குள் பொதுச் சட்டம் செல்லுபடியாகாது. வட மாகாணத்தில் அதி பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்புக்கும் இதற்கும் எவ்வித தொடர்ப்பும் கிடையாது. தற்போது, அப்பிரதேசங்கள் வேறு அரசியல் திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அப்பிரதேசத்தில் வசித்த மக்களின் காணி,பூமிகள், சொத்துகள், கட்டடங்கள் கைப்பற்றப்பட்டு வேறு திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதோடு, விஷேட பொருளாதார வலயங்களும் அமைக்கப்டுகின்றன. உதாரணமாக, திருகோணலையில் விஷேட பொருளாதார வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அது 675 கிலோ மீட்டரைக் கொண்ட விசாலமான பிரதேசம். கொழும்புக்கு சமமான விசாலமான பிதேசம். அந்த பூமியில் பல காணித் துண்டுகள் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்துக்குள்ளும் இலங்கையின் சட்டம் செல்லுபடியாகாது.

சில காலங்களுக்கு முனனா், அந்த விஷேட பொருளாதார வலயத்திற்குள் கொலையொன்று நடந்தது. கொலை பற்றிய விசாணைகளை மேற்கொள்வதற்கு மூதூர் மாவட்ட நீதிபதி வலயத்திற்குள் செல்ல முற்பட்டார். அங்கிருந்தவர்கள் நீதிபதி வலயத்துக்குள் செல்வதைத் தடுத்தனர். அதற்கு அவர்கள் கூறிய காரணம், இலங்கையின் சட்டம் அங்கு எடுபடாது என்று. எனவே அந்த வலயத்துக்குள் செயல்பட இலங்கையின் நீதிபதிக்கு சட்டபூர்வமான அதிகாரம் கிடையாது. இவ்வாறான விஷேட வலயங்கள் எல்லா இடங்களிலும் அமைக்கப் படுகின்றன. அதாவது, தாராளமயத்தின் முதலாம் கட்டத்தில் விஷேட வர்த்தக வலயங்ளைத் மட்டுமே ஜே.ஆர். ஜயவர்தன அமைத்தாரென்றால், இப்போது, சூதாட்ட



படிப்பகம்

www.padippakam.com

வலயம், நிர்வாண வலயம், அதி பாதுகாப்பு வலயம் என விஷேட வலயங்கள் அமைக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் எப்படியான வலயங்கள் வருமோ சொல்ல முடியாது.

முதலாவது கட்டத்தைப் போன்றே இரண்டாவது கட்டத்திலும் மக்களை மயக்குவதற்காக பாரிய திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. துரித மகாவலித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது. இதனால் வெளிநாட்டுக்கும் அரிசி கொடுக்க முடியும், மின்சாரம் வழங்க முடியும் என்று கூறப்பட்டது. அது வெத்து வேட்டாகிவிட்டது. நாம் என்ன செய்கிறோம், பர்மாவிலிருந்தும், வியட்நாமிலிருந்தும், வேறு நாடுகளிலிருந்தும் அரிசி இறக்குமதி செய்கிறோம். இந்தியாவுக்கும் மின்சாரம் வழங்க முடியுமென அன்று கூறப்பட்டது. அது வெறுமனே வாய்வீச்சு என்பது நிரூபணமாகிவிட்டது. இந்தியாவுக்கு மின்சாரம் வழங்குவது எப்படியிருந்த போதிலும், இன்று இந்தியாவிடமிருந்து மின்சாரம் வாங்கப்படுகிறது. இந்தியாவுடன் புதிய திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மதுரையிலிருந்து தலைமன்னார் வரை கடலுக்கடியாக "கேபல்" பொருத்தப்படுகிறது. பாரிய திட்டங்கள் குறித்து சொன்னதற்கும், செய்ததற்குமிடையிலான இடைவளி 30 ஆண்டுகளுக்குப் பிறகு எமக்குத் தெரிய வந்திருக்கிறது. பாரிய திட்டங்கள் குறித்து அன்று கூறியதற்கும், நடந்திருப்பதற்கும் இடையே பெரிய இடைவெளி இருப்பது 25-30 வருடங்களுக்குப் பின்னர் இன்று எமக்குத் தெரிகிறது. ஆனால், இப்போது வேறு பாரிய திட்டங்ளைப் பற்றி கூறுகின்றனர். அம்பாந்தோட்டை துறைமுகம் என்கின்றனர்: மத்தல விமான நிலையம் என்கின்றனர். நுரைச்சோலை அனல் மின் நிலைம் என்கின்றனர். அவ்வாறான பாரிய பல திட்டங்கள் உள்ளன. அவற்றைத் தான் அபிவிருத்தி என்று காட்டுகின்றனர். அவை வெற்றியா, தோல்வியா என்பது குறித்து வாத விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அம்பாந்தோட்டை துறைமுகத்தை எடுத்துக்கொண்டால், அது வெற்றியளித்துள்ளதா என்பது குறித்து



படிப்பகம்

www.padippakam.com



கருத்தாடல் நடந்து வருகிறது. ஆனால், இவற்றை நாம் அனுபவ ரீதியாக கற்றுக் கொள்வதாயிருந்தால், கொழும்பு துறைமுகத்தை விட அம்பாந்தோட்டை துறைமுகத்தினால் எமக்குக் கிடைத்த பலன் என்வென்று 20-30 வருடங்களுக்குப் பின்னர் தான் மீளாய்வு செய்ய வேண்டும். அப்போதுதான் உண்மை வெளிச்சத்துக்கு வரும். அரசாங்கம் போலி அபிவிருத்தியைக் காட்டுகிறது. இதுபோன்ற அபிவிருத்திகளும் ஒரு பக்கத்தில் செயல்பட்டு வருகின்றன. மறுபக்கத்தில் அடிப்படை வசதிகள் விருத்தி செய்யப்படுவதோடு, பாதைகளும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவற்றைத்தான் பாரிய அபிவிருத்தி என்கிறார்கள். உண்மையான அபிவிருத்தி பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது. உற்பத்தியை பரவலாக்க வேண்டும். உற்பத்தி விரிவாக்கப்படும் போதுதான் நாட்டின் வருமானம் அதிகரிக்கும். மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். அதற்காகத்தான் அடிப்படை வசதிளை விருத்தி செய்ய வேண்டும். இப்போது என்ன நடக்கிறது என்றால், பாதைகளைக் காட்டி அபிவிருத்தி என்ற கானலைக் காட்டுகிறார்கள். அதுதான் முதல் கட்டத்தில் செய்த வேலைகளை இரண்டாம் கட்டத்திலும் செய்யும் முறை.

முதலாம் கட்டத்தில் செய்ய முடியாத வேலைகள் இரண்டாம் கட்டத்தில செய்யப்படுகின்றன. முதல்' கட்டத்தில் ஜயவர்தனாவால் தொழில் துறைகளை தனியார்மயமாக்க முடிந்தது. ஆனால் சேவைகைளை தனியார்மயமாக்க முடியவில்லை. சுதந்திர கல்வி பாதுகாப்பாக இருந்தது. சுதந்திர சுகாதாரச் சேவை பாதுகாப்பாக இருந்தது. இன்று அந்தச் சேவைகள் தனியார்மயமாவதற்கு தயாராக உள்ளன. கல்வியை தனியார் மயமாக்குவதற்கான சட்டவரைவு தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவிருக்கிறது. சுகாதாரச் சேவை தனியார்மயத்துக்கு தயாராக இருக்கிறது. அதற்கு சட்டவரைவு எதுவும் கிடையாது. மருந்துகளை பணம் கொடுத்து வாங்குவதற்கு மருத்துவ மனைகளில் "பாமசி"களை



படிப்பகம்

www.padippakam.com

திறக்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அரச மருத்துவ மனைகளில் மருத்துவர் துண்டு எழுதித் தந்த பின்னர் அங்குள்ள பாமசியில் பணம்கொடுத்து மருந்து வாங்கவேண்டும். அரசாங்க டிஸ்பென்சரியில் மருந்து கிடையாது. மருத்துவ மனையிலுள்ள டிஸ்பென்சரியை காலப்போக்கில் மூடத்தான் வேண்டும். சுகாதாரச் சேவை மெதுவாக தனியார்மயமாகி வருகிறது. போக்கு வரத்து போன்ற சேவைகள் ஏற்கனவே தனியார்மயமாகிவிட்டன. இதற்குப் பின்னர் அவை சேவைகளாக இருக்க மாட்டாது. பஸ்ஸில் பயணிப்பவர்களுக்கு அது நன்றாவே தெரியும். எனவே சேவைகளைத் தனியார்மயப்படுத்தல் இரண்டாவது கட்டத்தில் ஆரம்பமாகப் போகிறது

அடுத்ததாக காடு. நிலம். நீர் போன்ற வளங்கள். முதலாம் கட்டத்தில் அவற்றைத் தனியார்ம[illegible] முடியவில்லை. அதற்கு பாரிய எதிர்ப்பு வலுத்தது. ஆனால் இப்போது அவற்றையும் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. சந்திரிகா அம்மையார் பதவியில் இருந்த காலத்தில் சட்ட வரைவொன்று கொண்டு வரப்பட்டது, "நீர் முகமைத்துவ சட்ட வரைவு" என்று. மக்கள் போராடி அந்த சட்ட வரைவை தோற்கடித்தனர். அந்த சட்ட வரைவு இப்போது மீண்டும் தலை தூக்கக் தயாராகி வருகிறது. அந்த சட்ட வ்ரைவுக்கு ஏற்ப, எமக்குச் சொந்தமானது என இதுரை நாம் எண்ணிக் கொண்டிருந்த இயற்கை வளங்கள் விற்கவும், வாங்குவதற்குமான வியாபாரப் பண்டங்களாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, நிலத்துக்கடியில் உள்ள நீர் வியாபாரப் பொருளாக்கப்பட்டுள்ளது. எனவே நாம் தண்ணீருக்காக பணம் செலுத்த வேண்டும். வீட்டுத் தோட்டத்தில் கிணறொன்றைத் தோண்டினால், அதற்கும் வரி செலுத்த வேண்டும், நிலத்துக்கடியிலுள்ள நீரைப் பயன்படுத்துவதற்கும், விவசாயிகள் தாம் பயன்படுத்தும் தண்ணீருருக்கான வரி செலுத்த வேண்டும். தண்ணீரை வியாபாரப் பண்டமாக்கும் சட்ட வரைவு



படிப்பகம்

www.padippakam.com

[illegible]

[illegible] வரைவு [illegible] கூறப்படுகிறது. காடுகளும் வியாபாரப் பண்டங்களாக்கப்பட்டுள்ளன. சிங்கராஜ காட்டை இரண்டாகப் பிரிக்கும் வீதியொன்று வெட்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் காண முடியும். இது குறித்து சூழல் காப்பாளர்களும், புத்திஜீவிகளும் கதைப்பதில்லை. பொலன்னருவை, சோமாவதிய பிரதேசத்தில் 5000 ஏக்கர் காணி பயிர்ச்செய்கைக்கு என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து சூழல் காப்பாளர்கள், புத்திஜீவிகள் யாருமே கதைப்பதில்லை. சிறு விடயங்களில் கூட சட்டங்கள் மீறப்படுகின்றன. சமீபத்தில் ஒரு மிருக வைத்தியர் என்னிடம் கூறினார், " தற்போது இலங்கையில் 3000 யானைகள் மாத்திரமே இருக்கின்றன, அவற்றில் எத்தனை யானைகளைக் கட்டுக்குள் கொண்டு வரமுடியுமோ அத்தனை யானைகள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டன. அதற்கு மேலதிகமாக கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தால், காட்டுக்குள் இருக்கும் யானைகளின் எண்ணிக்கை குறையும் என்று. உல்லாசப் பிரயாணத் துறை வளர்ச்சி கண்டு வருவதால், உல்லாசப் பிரயாணிகள் யானைகள் மீது ஏறிச் சவாரி செய்வதற்கு வசதியாக, அதிகமான யானைகளை கட்டுக்குள் கொண்டுவர வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. மிருகவைத்தியர்கள், சூழல்வாதிகள் போன்றோர் அதற்குத் தடையாக இருந்தனர். காட்டு யானைளை அளவுக்கதிகமாக கட்டுக்குள் கொண்டு வருவதை மிருக வைத்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர். இந்நிலையில், அரசாங்கம் காட்டு யானைகளின் எண்ணிக்கை குறித்து புதிதாக கணக்கெடுப்பொன்றை நடத்தியது. பின்னர், கிட்டத்தட்ட 6000 யானைகள் இருப்பதாக அரசாங்கம் கூறியது. சிலவேளை ஒரே யானையை இரண்டு மூன்று முறை கணக்கெடுத்திருக்கவும் கூடும். அவற்றில் 600 யானைகளை கட்டுக்குள் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையில்



படிப்பகம்

www.padippakam.com

6000 காட்டு யானைகள் இல்லை, போலியான கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே 3000 யானைகள் மட்டுமே இருப்பதாகவும் அதில் 600 யானைகளை பிடிக்கப் போகிறார்கள் இதனால் இலங்கையிலுள்ள காட்டு யானைகள் முற்றாக அழியக் கூடிய வாய்ப்பிருக்கின்றது என்று கூறப்படுகிறது.

புதிய லிபரல்வாதத்தின் இரண்டாவது கட்டம் இப்போது ஆரம்பமாகியுள்ளது பொருளாதாரத்தில் இரண்டு வகையான கணக்குகள் இருக்கின்றன. ஒன்று நடைமுறை கணக்கு மற்றது முதலீட்டுக் கணக்கு. முதலாவது கட்டத்தில் ஜயவர்தன நடைமுறை கணக்கைத் தொடங்கினார். கடந்த 2011 வரவுசெலவு அறிக்கயை சமர்ப்பித்து, 2010 நவம்பர் மாதம் நிதி அமைச்சின் 7 உத்தரவுகளை வெளியிட்டு, ராஜபக்ஷ முதலீட்டுக் கணக்கை திறந்தார். எனவே, முதல் கட்டத்தில் பூர்த்தி செய்யப்படாத வேலைகள் இரண்டாவது கட்டத்தில் தொடரவிருக்கின்றன. மக்கள் எதிர்ப்பு, மக்கள் அமைப்புகளினது பலம், சர்வதேச அரசியலில் இருந்த நிலைமை போன்றவை காரணமாக முதலாவது கட்டத்தில் பூர்த்திசெய்ய முடியாமலிருந்த வேலைகள், இப்போது, இரண்டாவது கட்டத்தில் வேகமாக நடந்து வருகின்றன. அதனால்தான், புதிய லிபரல்வாதத்தின் இரண்டாவது கட்டம் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என நாம் கூறுகிறோம். மகிந்த ராஜபக்ஷ புதிய லிபரல்வாதத்தை, வேகமாகவும், புதிய பாய்ச்சலோடும் ஆரம்பித்துள்ளார். ஜயவர்தன அவர்கள் முதலாவது கட்டத்தில் செயல் பட்டதைப் போன்று, இப்போது, மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது கட்டத்தில் வேகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இலங்கையில் 35 வருடம் காலம் புதிய லிபரல்வாதம் செயல்பட்டதற்குப் பின்னர், நன்றாக செயல்படுத்த முடியாதிருந்த, பூர்த்திசெய்ய முடியாதிருந்த மீளமைப்புகள் இப்போது இரண்டாவது கட்டத்தில் வேகமாக நடந்தேறி வருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



அன்புக்குறிய தோழர், தோழியரே,

இந்த நிலமையின் கீழ் தான் புதிய லிபரல்வாத பொருளாதாரத்தின் இரண்டாவது கட்டத்தைப் பற்றி உரையாற்ற வேண்டியுள்ளது. சிலர் இந்த லிபரல்வாதத்தை முதலாளித்துவத்திலிருந்து பிரித்து காட்டுகின்றனர். அதனால்தான் நாம் இதனை புதிய லிபரல்வாத முதலாளித்துவம் என்கிறோம். முதலாளித்துவத்தை அப்படியே வைத்துக்கொண்டு புதிய லிபரல்வாதத்தை தோற்கடிக்க சிலர் முயற்சிக்கின்றனர். அவ்வாறு செய்ய முடியாது. ஏனென்றால் புதிய லிபரல்வாதம் என்பது முதலாளித்துவத்தின் வளர்ச்சிக் கட்டமாகும். புதிய லிபரல்வாதம் என்பது முதலாளித்துவத்தின் நீடிப்பு. லிபரல்வாதத்தை தோற்கடிக்காமல் தேசிய பொருளாதாரத்தையோ, வேறு எதையோ பேசுவதனால் முதலாளித்தவத்தைத் தோற்கடிக்க முடியாது. இப்போது, மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு ஆதரவான பொருளாதாரத் துறையைச் சார்ந்தவர்களின் கோஷங்கள் தேவைப்படுகிறது. புதிய லிபரல்வாதம் செயல்படுகிறது. புதிய லிபரல்வாதத்தை தோற்கடிக்க வேண்டுமானால் தேசிய பொரளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றனர். தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்திய பின்னர் புதிய லிபரல்வாதத்தை எப்படியும் தோற்கடிக்க முடியாது. புதிய லிபரல்வாதம் என்பது புதிய முதலாளித்துவமாகும். அது முதலாளித்துவத்தின் ஒரு கட்டம். முதலாளித்துவத்தின் நீடிப்பு. சர்வதேச ரீதியில் அப்படித்தான் கூறப்படுகிறது. இது, இலங்கையில் மாத்திரம் உள்ளதல்ல. ஏகாதிபத்தியம், உலக மட்டத்தில் எல்லா நாடுகளுக்குள்ளும் நுழைந்த பின்னரே சுரண்டலை ஆரம்பித்திருக்கிறது, உலக மூலதனத்தை அனைத்து இடங்களிலும் நுழைத்திருக்கின்றது. தற்போது அது புதிய முறையில் செயல்பட்டு வருகின்றது. இதுவும் புதிய லிபரல்வாதம் என்றே அழைக்கப்படுகின்றது. லிபரல்வாதத்திற்குள் போட்டி நிலவுகின்றது.

முன்னர் காணப்பட்ட சுதந்திர போட்டி முறை புகுத்தப்படுவதைத் தான் புதிய லிபரல்வாதம் எனக் கூறப்படுகிறது. பிரச்சினை



படிப்பகம்

www.padippakam.com

என்னவென்றால், இப்போது புதிய லிபரல்வாதத்தின் இரண்டாவது கட்டத்தில் போட்டி நிராகரிக்கப்படுகிறது. உதாரணத்திற்கு லிபியாவை எடுத்துக்கொண்டால். லிபியாவில் எண்ணெய் வளம் நிரம்பி இருக்கின்றது. ஏகாதிபத்தியவாதிகள் லிபியாவை கைப்பற்றி அங்குள்ள எண்ணெய் வளத்தைக் கொள்ளையிடப் போகிறார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் அது உண்மைதானா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் லிபியாவின் எண்ணெய் வளம் அமெரிக்காவினதும், பிரிட்டனிதும் கைகளிலேயே இருந்தது. பெரும்பாலான எண்ணெய்க் கிணறுகள் பிரிட்டன், மற்றும் அமெரிக்க நிறுவனங்களுக்கே சொந்தமாயிருந்தன. கடாபி பெரிய ஜனநாயகவாதி என சுயாதீன தொலைக் காட்சி கூறினாலும், லிபியாவின் பொருளாதாரத்தில் பெரும் பகுதி ஏகாதிபத்திய நிறுவனங்களிடமே உள்ளன. இப்போது பிரச்சினை என்னவென்றால், அவற்றைக் கைப்பற்றிக் கொள்வதற்கான போட்டி நந்துக்கொண்டிருக்கிறது. போட்டியில்லாமல் கைப்பற்றுவதுதான் இப்போதைய தேவை. எனவே இந்த புதிய லிபரல்வாதத்தின் இரண்டாவது கட்டம் போட்டியை நிராகரித்து விட்டே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உலகலாவிய ஏகபோகத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் வேகமாக வியாபித்து வரும்நிலையில், இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் இலங்கையின் அளவுக்கு ஏற்ப, தேசிய மட்டத்தில் புதிய லிபரல்வாதம் செயல்படுத்தப்படுகிறது. புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் இரண்டாவது கட்டம் தொடப்பாக இதைத்தான உங்களோடு பேச வேண்டியுள்ளது.

ஆனால் இவ்விடத்தில் கவனம் செலுத்த வேண்டிய இன்னொரு பக்கமும் இருக்கிறது. இந்த விடயத்தில் ஆழமாக கருத்தாடல் செய்ய வேண்டுமென நான் நினைக்கிறேன். இந்த புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டத்துக்குள் அல்லது முதலாவது கட்டத்துக்குள் பொருளாதாரத்துக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து எமக்கு பிரச்சினை இருக்கிறது. இது



படிப்பகம்

www.padippakam.com



குறித்து, பொருளியல் விஞ்ஞானம் அறிந்தவர்களோடும் சேர்ந்து கலந்துரையாட வேண்டும். நவ தாராளமய முதலாளித்துவம் என்றால் என்ன, அதன் பொருளாதார உபாயங்கள் எத்தகையது, நடைமுறை கணக்குக்கு என்ன நடக்கும், ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு என்ன நடக்கும் என்பன குறித்து கதைக்க முடியும். தனியார்மயமாக்கியதன் பின்னர் நிலைமை நன்றாக இருக்கின்றதா? இலலையா? நாட்டின் வருமானத்துக்கு என்ன நேர்ந்தது, சேவைப் பொருளாதாரம் முன்னேற்றமடைவது நல்லதா, உற்பத்திப் பொருளாதாரம் முன்னேற்றமடைவது நல்லதா, என்று கதைக்க முடியும். ஆனால், பிரச்சினை இருப்பது அங்கல்ல. இங்கு நான் வேறொரு தலைப்பிலேயே உரையாற்ற வந்தேன். அதற்குள் பிரவேசிப்பதற்காகத்தான் புதிய லிபரல்வாதம் குறித்து பேச வேண்டி ஏற்பட்டது.

இந்த புதிய லிபரல்வாத முதலாளித்துவத்துக்குள் இலங்கையர்களாகிய நாம் 35 வருடங்கள் வாழ்ந்துள்ளோம் என நான் நினைக்கிறேன். இங்கிருப்பவர்களில் பெரும்பாலானோர் தங்களது முழு வாழ் நாளையும் அல்லது அதில் பாதியையாவது, தனக்கு விபரம் தெரிந்த நாள் தொட்டு இந்த புதிய லிபரல்வாத முதலாளித்துவத்துக்குள் கழித்திருக்கக் கூடும். அதாவது. இங்கு வந்திருக்கும் 40 வயது பூர்த்தியடைந்த ஒருவர் 35 வருடங்களை இந்த புதிய லிபரல்வாத முதலாளித்துவத்துக்குள் கழித்திருகக் வேண்டும். இந்த புதிய லிபரல்வாத முதலாளித்துவம் மனிதர்களுக்கு என்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றித்தான் பேச வேண்டும். இதன் மூலம் சமூகத்துக்கு கிடைத்த நண்மைகள் என்ன? இந்த மீளமைப்பு சமூகத்துக்கு என்ன செயதிருக்கிறது. இரண்டாவது கட்டம் செயல்பட்டால் சமூகத்துக்க என்ன நடக்கும், அதைக் குறித்துத் தான் தோழர்களே நாம் உரையாட வேண்டும். எமக்கு என்ன நடந்தது? பொருளாதாரத்துக்கு என்ன நடந்தது என்பது குறித்து புத்தகங்களைப் படித்து அறிந்துக் கொளள முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

அதுவல்ல பிரச்சினை. எமக்கு என்ன நடந்திருக்கிறது?

இந்த புதிய லிபரல்வாத மீளமைப்புக்குள் நாட்டின், அனைத்து தரத்தைச் சேர்ந்த மக்களும் பொருளாதார சமத்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகமதிகமாக வேலை செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. சில காலத்துக்கு முன்பு களனி பல்கலைக் கழக பாதுகாப்புப் பிரிவில் அதிகாரியாகப் பணியாற்றிய ஒரு தோழர், கடமை நேரத்தில் தூங்கியதற்காக பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். பின்னர் எமது தோழர்கள் சிலர் அவரைக் கண்டு கதைத்துள்ளனர். அவர் ஆச்சரியப்படக் கூடிய சில விடயங்களைக் கூறியிருந்தார். வாழ்வதற்காக மூன்று தொழில்களைச் செய்கிறார். களனி பல்கலைக் கழகத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகப் பணியாற்றுவதோடு, வேறொரு பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் ஊடாக களனி டயர் நிறுவனத்திலும் பணியாற்றுகிறார். 8 மணித்தியால வேலை என்ற ரீதியில் 16 மணித்தியாலங்கள் வேலை செய்கிறார். அதைத்தவிர, நேரம் கிடைக்கம் போது குதிரைப் பந்தைய புக்கி ஒன்றிலும் வேலை பார்க்கிறார். எனவே, அவருக்கு தூங்குவதற்கு நேரம் கிடைப்பதில்லை. அதனால் தான் அவருக்கு தூக்கம் வந்துள்ளது. " நீங்கள் மூன்று தொழில்கள் செய்கிறீர்கள் அவற்றில் ஒன்று இல்லாமலானால் என்னவென்று எமது தோழர்கள் கேட்டுள்ளனர். அதற்கு அவர் " எனக்கு மூன்று தொழில்கள் இருந்தாலும் வாழ்க்கைச் செலவுக்கு போதாது. இந்த மூன்று தொழில்களிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தில் போடினுக்கும் கொடுத்து, அன்றாட செலவும் போக வீட்டுக்கு சிறு தொகையைத் தான் அனுப்ப முடிகிறது. ஆகவே, ஒரு தொழிலை இழப்பதென்பது என்னால் தாங்கிக் கொள்ள முடியாத விடயம். மூன்று தொழிகளையும் செய்யாமல எப்படியும் வாழ முடியாது என்று கூறியுள்ளார். எமது சில நண்பர்கள் அதையும் விட பெரிய தொழில் தேடி அமெரிக்காவுக்கும், கனடாவுக்கம் சென்றார்கள். அவர்களும் மூன்று தொழில்களைச் செய்கிறார்கள். பகலில் ஒரு



படிப்பகம்

www.padippakam.com



வேலையைச் செய்கிறார்கள், பின்னேரம் சுபர்மார்க்கட்டில் கெசியர் வேலை பார்க்கிறார்கள், இரவில் பெற்றோல் நிலையங்களில் வேலை செய்கிறார்கள். அவர்களும் மூன்று தொழில்கள் செய்கிறார்கள். ஒரு தொழிலைக் கொண்டு வாழ முடியாதென்று அவர்களும் கூறுகிறார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், ஒரு தொழிலை மாத்திரம் செய்தால் போதாது, மேலதிகமா வேலை செய்ய வேண்டு. அதாவது, ஒரு நாளில் கூடுதலான நேரம் உழைக்க வேண்டும். அதிகாலை 04 மணிக்கு வீட்டை விட்டு வெளியேறும் ஒருவர், இரவு 10 மணிக்கே வீடு திரும்புகிறார். நாளின் செயல்பாடுகள் மாறியுள்ளன. இந்த தொழில் முறையினால் ஓய்வு குறைகிறது. இதனால் அதிருப்தி. மனஉளைச்சல், கோபம் ஆகியன வேரூன்றுகிறது. எனவே அவர்கள் தொடர்ந்தும் மனிதர்களாக வாழ்வதில்லை. மனித இயந்திரங்களாகவே வாழ்கின்றனர். அந்த மனித இயந்திரங்களில் மகிழ்ச்சி கிடையாது. மனிதத் தொடர்ப்பு இருந்தால் மட்டுமே மகிழ்ச்சி கிட்டும். உழைப்பினதும் மனிதத் தொடர்பினதும் ஊடாகவே மனிதர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்ப்பின் மூலமாகவே மகிழ்ச்சி கிடைக்கும். மனிதர்கள் இயந்திரங்களாக மாறுவதால் மனித நேயம் இல்லாமலாகிறது. மனிதன் இன்னொரு மனிதனோடு உறவுகளைப் பேணிக் கொள்வதற்கான வாய்ப்பு அற்றுப் போகிறது. வாய்ப்புகள் அற்றுப் போன பின்னர் மகிழ்ச்சி கிடையாது. மகிழ்சசி தொலைந்த பிறகு, மகிழ்ச்சிக்குறிய பாதை இதோ என்று முதலாளித்துவம் பொருட்களை அறிமுகப்படுத்தப்படுகிறது. மகிழ்ச்சிக்கான முறைகள் அமைத்துத் தரப்படுகின்றன. நாம் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்காக முதலாளித்துவம் எமக்கு நுகர் பொருட்களை தருகிறது. எங்களுக்கு பொருட்களைக் காட்டிச் சொல்கிறது, இதோ, " மகிழ்ச்சி இந்தப் பொருட்களிலேயே தங்கி இருக்கிறது" என்று. உண்மை என்னவென்றால, காட்டப்படும்



படிப்பகம்

www.padippakam.com

ஆடம்பரப் பொருட்களினால் தான் எமது மகிழ்ச்சி பறிக்கப்பட்டுள்ளது. மகிழ்ச்சி இல்லாமலாக்கப்பட்ட மனிதர்களுக்கு முதலாளித்துவம் கூறுகிறது, இதோ, இந்தப் பண்டங்ககளில் தான் மகிழ்ச்சி இருக்கிறதென்று. இந்த பொருட்களைக் கொண்டு மகிழ்ச்சியடைய முடியும் என்று கூறுகிறது. எனவே நாம் இந்த பொருட்களை வாங்க வேண்டும். அவர்கள் கூறும் அந்த மகிழ்ச்சிக்காக வாங்க வேண்டிய பொருளுக்கு பணம் தேட மேலும் பல மணி நேரம் உழைக்க வேண்டும். அதனால் எமது மகிழ்ச்சி பறிபோகிறது. அடுத்த நாள் எமக்கு வேறொரு பொருள் காட்டப்படுகிறது. அதில் தான் மகிழ்ச்சி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நாட்களில் எமது தொலைக் காட்சி அலைவரிசைகளில் "கதல்ல" என்ற பெயரில் வீடுகள் குறித்து நிகழ்ச்சியொன்று காட்டப்படுகிறது. "சிரி நிவச" என்ற பெயரில் இன்னொன்றும் காட்டப்படுகிறது. அந்த நிகழ்ச்சிகளில் கட்டடக் கலை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அதிக செலவில் கட்டப்பட்ட வீடுகள் காட்டப்படுகின்றன. இதைப்போன்ற நிகழ்ச்சிகள் தமிழ் தொலைக் காட்சிகளிலும் காட்டப்படுகின்றன. அவ்வாறான வீடுகள் காட்டப்படும் போது, எமக்குக் கிடைக்காதுபோன மகிழ்ச்சி இந்த வீடுகளில் இறுக்கின்றதென்ற ஓர் எண்ணம் எமக்குள் ஏற்படுகின்றது. எமது எணணங்களுக்கு போடப்படும் தீனி 'தான் அது. துன்பத்துக்குள்ளான மனிதனின் உணர்வு அது. எமக்கு மகிழ்சி கிடைக்காமைக்குக் காரணம் இப்படியான ஒரு வீடு இல்லாமை தான், எனவே நாம் இவ்வாறுான ஒரு வீட்டைக் கட்ட வேண்டும். அப்போது தான் எமக்கு மகிழ்ச்சி கிட்டும். அந்த வீட்டுக்குள்தான், (இந்தக் கட்டடத்துக்குள்) எமக்கு மகிழ்ச்சி இருக்கின்றதென்று நாம் நினைக்கிறோம். எனவே எப்பாடுபட்டாவது கடனை உடனை வாங்கி வீட்டைக் கட்டத் துவங்குகிறோம்.. புதிதாகப் பட்ட கடனை தவனை முறையில் அடைக்க வேண்டுமென்பதற்காக மேலதிக நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாய நிலை எமக்கு



படிப்பகம்

www.padippakam.com



ஏற்படுகிறது. வாழ்நாள் முழுவதும் அந்த வீட்டைக் கட்டி முடிக்க முடியாது. ஏனென்றால், கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அந்த வீட்டைக் கட்டி முடிக்க முடியாது. பொறியியல் துறையைச் சார்ந்த எமது நண்பர்கள் இருக்கின்றனர், அவர்களுக்கு அதிக சம்பளம் கிடைக்கிறது. அவர்கள் வீடு கட்ட ஆரம்பித்தாலும் கட்டி முடிக்க இயலாது, வீட்டைக் கட்டி முடிக்க மூன்று தலைமுறையாவது செல்லும். நாம் குறுகிய காலமே வாழப்போகிறோம். எனவே நாம் வாழ்வதற்காக வீடு கட்டவில்லை, வீடு கட்டுவதற்காக வாழ்கிறோம். எமது முழு வாழ்நாளும் இதற்காகவே செலவிடப்படுகிறது. 30 - 40 வருடங்களாக உழைத்து முதுமையடைந்த பின்னர் இவ்வளவு காலம் உழைத்ததில் கிடைத்த பலன் என்னவென யாரிடமாவது கேட்டால், வீடு கட்டினோம் என்றுதான் கூறுவார். உங்கள் வாழ்நாளில் நீங்கள் எதைச் சாதித்துள்ளீர்கள்? என்று கேட்டாலும் இதைத்தான் சொல்வார்கள்.

அமெரிக்கா , கனடா , அவுஸ்திரேலியா என்று சிலர் பயணமாகின்றனர். பினான்ஸ் கம்பனியொன்றிடமிருந்து தவணைக் கட்டணத்தில் வீடொன்றை எடுக்கின்றனர். அந்த நாடுகளில் தவணைக் கட்டண அடிப்படையில் வீடு வாங்க முடியும். அவர்கள் வெளிநாடு சென்ற நோக்கம் என்னவென்றால், கூடியளவு பணம் சம்பாதித்துக் கொண்டு இலங்கைக்கு வருவது தான். அப்படி வெளிநாடுகளுக்குச் சென்றவர்களிடம் அவர்களது நண்பர்கள் "எப்போது திரும்பி வருவீர்கள்" என்று கேட்டால், அவர்கள் சொல்கிறார்கள், இப்போது வர்க்கூடிய சூழ்நிலை இல்லை, இங்கேயே மடிய வேண்டியதுதான என்று. நாங்கள் பெரிய வீடொன்றை வாங்கினோம். அதற்காக 20 வருடங்கள் தவணைப் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. தவணையைக் கட்டி முடிக்க 20 வருடங்களாகும், அதன் பிறகு தான் வீடு எமக்குச் சொந்தமாகும், அதுவரை தவணைப் பணம் செலுத்தியேயாக வேண்டும், தவணைப்பணம் செலுத்துவதற்காகவே வேலை செய்கிறோம். புதிய கார் ஒன்றையும் வாங்யுள்ளோம்,



படிப்பகம்

www.padippakam.com

அதற்கும் தவனைப் பணம் கட்ட வேண்டும், அதற்கு தவனைப் பணம் கட்டுவதற்காக பெற்றோல் நிலையமொன்றில் பெற்றோல் அடிக்கிறேன், காருக்கு பெற்றோல் அடிப்பதற்காகவும், உணவுப் பொருட்களை வாங்குவதற்காகவுமே சுபர் மார்க்கட்டில் வேலை செய்கிறேன் என்றும் சொல்வார்கள். இவற்றையெல்லாம் செய்து முடித்த பிறகு, வாழ்வதற்கு அவர்களுக்கு நேரம் கிடைக்காது. இதுதான் நாம் எதிர்கொண்டுள்ள மானுட பரிதாப நிலை. இந்த பரிதாப நிலையை நாம் கண்டு கொள்ளாததுதான் பிரச்சினை. நாம் பரிதாப நிலையில் உள்ளோம் என்பதை புரிந்துக் கொள்ளாமல், நாம் பொறியில் சிக்கிக் கொண்டுள்ளோம் என்பதை புரிந்து கொள்ளாமல், இதுதான் வாழ்க்கை என எண்ணிக் கொண்டிருப்பதுதான் பிரச்சினை. இதுதான்புதிய லிபரல்வாதத்தின் வீழ்ச்சி. மனிதர்களுக்கு இல்லாமாகிய மகிழ்ச்சி பெரிய வாகனங்களுக்குள், பெரிய வீடுகளுக்குள் தான் இருப்பதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அவற்றையே நாம் பற்றிப் பிடிக்க வேண்டுமென உறுதியாக இருக்கிறோம். எனவே, எமது வாழ்க்கையை விடவும், எமது மனிதத் தொடர்ப்புகளை விடவும் நட்புறவுகளை விடவும் கணவன் அல்லது மனைவியோடு வாழ்வதை விடவும் குழந்தைகள் விடயத்தில் கவனம் செலுத்துவதை விடவும் அண்டை அயலாரோடு இருக்கும் பிணைப்பை விடவும் பொருட்கள் முக்கியமானதெனவும், வீடுதான் முக்கியமானதெனவும் நினைக்கிறேம்.

தொலைக்காட்சி நிகழ்சகளுக்குள் இது நன்றாகவே தெரிகிறது. அப்படியான எண்ணத்தோடு தான் நீங்கள் தொலைக் காட்சியைப் பார்க்கிறீர்களோ எனக்குத் தெரியாது. தொலைக் காட்சி பார்க்கும் போதெல்லாம் அவ்வாறான காட்சிகள்தான் தெரிகின்றன. வார இறுதி நகழ்சிகளில் பெரும்பாலும் இவ்வாறான நிகழ்சிகள் தான் அதிகமாகக் காட்டப்படுகின்றன. திருமண உற்சவங்கள் தொடர்ப்பிலான நிகழ்ச்சிகள், திருமண உற்சவங்களை இப்படித்தான்



படிப்பகம்

www.padippakam.com



நடத்த வேண்டுமென அவர்கள் எமக்குக் கூறுகின்றனர். மாதிரிகள் காட்டப்படுகின்றன. எல்லா தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் திருமண உற்சவங்கள் குறித்து நிகழ்ச்சிக்ள காட்டப்படுகின்றன. ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தில் திருமண உற்சவம் குறித்து "ரியலிட்டி சோ" ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் போட்டிகளும் நடக்கின்றன. இந்த திருமண உற்சவ நிகழ்ச்சிகளில் திருமணம் முடிப்பதைத் தவிர மற்ற அனைத்தும் காட்டப்படுகின்றன. இருவர் திருமணம் முடிப்பது மாத்திரம் அங்கே இல்லை. கப்பலில் திருமண மேடை அமைக்கப்படுகிறது, தம்பதிகள் திருமண மேடையில் அமர்கின்றனர், பட்டாசுகள் மத்தாப்புகள் கொளுத்தப் படுகின்றன. உயரமான "கேக்" செய்யப்படுகிறது. மின் விளக்குகள் எரிகின்றன. தண்ணீர் வீசப்படுகின்றது. வித விதமான களியாட்டங்கள் நடக்கின்றன. ஆனால், திருமணத்தைக் காணவில்லை. இப்போது நாம் நினைக்கிறோம் கப்பலில் திருமணம் நடத்துவது தான் மதகிழ்ச்சி என்று. எமது திருமண வாழ்க்கை மகிழ்ச்சியற்றிருப்பதற்கு சாதாரண மண்டபத்தில் அல்லது வீட்டில் திருமணத்தை நடத்தியதுதான் காரணமாக இருக்குமோ தெரியாது. கப்பலில் அல்லது விமானத்தில் திருமணத்தை நடத்தினால் மகிழ்சியாயிருக்குமென்று நாம் நினைக்கிறோம். இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அப்படித்தான் போதிக்கப்படுகின்றது. உண்மையிலேயே , திருமணத்தின் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சி இந்த கூத்தடிப்புகளால் கிடைக்காது. தான் விரும்பும் ஒருவரோடு மணவாழ்க்கையில் ஈடுபடப் போகிறோம் என்பதில் கிடைக்கும் மகிழ்ச்சிதான் திருமண நிகழ்வில் கிடைக்கம் மகிழ்ச்சி. எம்மோடு இருந்த ஒருவர் திருமணம் முடித்து சந்தோசமடைகிறார் எனறால் அதுதான் திருமணத்தின்போது கிடைக்கும் மகிழ்ச்சி. வேறு சந்தோசங்கள் அங்கு கிடையாது. மனித உறவுகளின் வாயிலாகக் கிடைக்கும் மகிழ்ச்சிதான் அங்கிருக்கும் மகிழ்ச்சி. இப்போது திருமண விழாக்களில் மனித உறவுகள் நீக்கப்பட்டுள்ளன. மனித



படிப்பகம்

www.padippakam.com

நேயம் நீக்கபட்டுள்ளது. இப்போது சொத்துக்களுடன் தான் உறவுகள் பேணப்படுகின்றன. இதில் புதுமைப்பட ஒன்றுமே இல்லை. இது புதுமையானது தான் என யாராவது நினைப்பார்களேயானல், ஞாயிறு பத்திரிகைகளைப் புரட்டிப் பாருங்கள். திருமண சேவை பக்கத்தைப் புரட்டிப் பாருங்கள். நூற்றுக்கணக்கான விளம்பரங்கள் இருக்கின்றன. இருவர் மணமுடிப்பதாக அவற்றில் ஒன்றுகூட இல்லை. எனக்கு 20 ஏக்கர் தென்னந்தோட்டம் இருக்கிறது, ஆகவே 20 ஏக்கர் தென்னந் தோப்பு உள்ள ஒருவரை விரும்புகிறேன். எனக்கு 50,000 வருமானமுள்ள தொழில் இருக்கிறது. ஆகவே மூன்று லட்சம் ரூபா பெருமதியான தங்க நகைகள் வைத்திருப்பவரை நான் விரும்புகிறேன். எனது மகள் டொக்டருக்குப் படித்துள்ளார், எனது மகளுக்கு டொக்டர் அல்லது இஞ்சினீயர் மணமகமன் தேவைப்படுகிறார். எனது மகள் இன்ன குலத்தைச் சேர்ந்தவர் பேராசியராக இருக்கிறார், அந்தத் தரத்தையோ அல்லது அதை விட உயர்ந்த பதவி வகிக்கும் மணமகன் தேவைப்படுகிர் போன்ற விளம்பரங்கள் பெருமளவில் காணப்படும். இங்கே மனிதர்களுக்கிடையில் திருமணம் நடப்பதில்லை, வங்கிக் கணக்கு, தோட்டம் துரவு, தென்னந்தோப்பு பட்டம்பதவி போன்றவற்றுக்கு இடையியே தான் திருமணங்கள் நடக்கின்றன.

இஞ்சினியராக இருக்கும் ஒருவருக்கு டொக்டர் மணமகள் தேவை என விளம்பரம் செய்யபப்படுகிறது. செய்யப்படுகிறது. திருமணம் முடிப்பது மனிதர்களல்ல, சொத்துக்கள். சொத்துகளுக்கிடையிலான தொடர்ப்பே காணப்படுகிறது. மனிதத் தொடர்பபு இல்லாததால் மகிழ்சியில்லை. தேயிலைத் தோட்டமும், தென்னந்தோட்டமும் திருமணம் முடித்தபின்னர் மகிழ்ச்சியடைய எதுவித காரணும் இல்லை. அதனால், அந்த வாழ்க்கைகளில் மகிழ்ச்சி கிடையாது. மகிழ்ச்சி கிட்டாத போது நாம் நினைக்கிறோம், அந்தத் தொலைக் காட்சிகளில் காட்டப்படுவதைப் போன்று திருமணங்களைச் செய்தால் மகிழ்ச்சி கிட்டும் என்று. பின்னர் நாம் மேலும் பெருந்தொகை



படிப்பகம்

www.padippakam.com



பணத்தைச் செலவிட்டு, கடன்பட்டு அதைப் போன்ற திருமணத்தை நடத்துகிறோம். பொருட்களை வாங்கிக் குவிக்கிறோம்.

நாம் வாழ்வதற்காக பொருட்களை வாங்குவதில்லை, நுகர்பொருட்களை வாங்குவதற்காக வாழ்கிறோம். நுகர் பொருட்களை வாங்குவதற்காக வாழ்க்கையைத் தியாகம் செய்கிறோம். இது வீடு கட்டவேண்டாம், திருமண விழாக்களை நடத்த வேண்டாம் என்பது அர்த்தமல்ல. அதையும் செய்யுங்கள். ஆனால், அதுதான் வாழ்க்கை என எண்ணிவிடாதீர்கள்.

எங்களைப் பற்றிநாங்களே சிந்தித்துப் பார்ப்போம். இந்த வாழும் மக்கள் மோட்டார் பைக் ஒன்றுக்காக, தொலைபேசி ஒன்றுக்காக வாழ்வைத் தியாகம் செய்யும் மக்களை, இன்னும் சிறிது முன்னேறியதன் பின்னர், காணித் துண்டுக்காக, ப்ளட் ஸ்கிரீன் டீவீ ஒன்றுக்காக, துணி துவைக்கும் மெசின் ஒன்றுக்காக வாழ்வைத் தியாகம் செய்யும் மக்களை இந்த புதியலிபரல்வாத முதலாளித்துவம் தயாரித்துள்ளது. அதாவது, மனிதர்களாலேயே தயாரிக்கப்பட்ட பொருள்கள் மனிதனுக்கு எதிரான சக்தியாக மாறியுள்ளன. பொருட்களால் மனிதர்கள் வாங்கப் பட்டுள்ளார்கள். மனிதர்கள் பண்டங்களாகியுள்ளனர். அதைக் கொண்டுதான் மனிதன் மதிப்பிடப்படுகிறான். அவனது அறையில் எவ்வளவு பொருட்கள் குவிக்கப்பட்டுள்ளனவோ, அதுதான் வெற்றி எனக் கருதப்படுகிறது. இப்படியான மனிதர்களையே வெற்றியாளர் என எமக்குக் காட்டப்படுகிறது. தனது வரவேற்பறையில் மின்சார உபகரணங்களைக் குவித்துக் கொண்டிருக்கும் மனிதர்கள். இதுதான் வெற்றியை அளவீடு செய்யும் முறை. வெற்றியாளராக இருந்தால், அவர் வீட்டில் ப்ளட் ஸ்கிறீன் தொலைக்காட்சி இருக்கும். அவரது வீட்டில் வீட்டுத் திரைக் கூட(ஹோம் தியெட்டர்) வசதியும் இருக்கும். பெரிய பிரிஜ் இருக்கும். அவருக்கு பெரிய காரொன்று இருக்கும். அவருக்கு 5மாடி வீடொன்று இருககும். அதுதான் அவர்கள் தயாரிக்கும் மனித எடுத்துக் காட்டுகள். இவை



படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கைக்கு தேவையானதுதான், என்றாலும் வாழ்க்கை என்பது இந்தப் பொருட்களல்ல. வாழ்க்கை வேறோர் இடத்தில் இருக்கிறது. எனவே, உண்மையிலேயே நடந்திருப்பது என்னவென்றால், நவ தாராளமய முதலாளித்துவம் மனித நேயத்தை அழித்திருக்கிறது. ஒரு போலியான மனிதத் தொடர்ப்பு உருவாக்கி விடப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் இன்னொரு மனிதனை பயன் படுத்த முடியுமா என்ற கண்ணோட்டத்திலேயே ஒவ்வொருவரையும் பார்க்கிறோம். அதுதான் புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் குறிக்கோள். மனிதன் இன்னொரு மனிதனோடு கதைப்பது கூட இவனால் தனக்கு என்ன லாபம் கிடைக்கும் என்ற எண்ணத்தோடேதான். இன்னொரு மனிதனைப் பார்த்து சிரிப்பது கூட அவனால் தனக்குக் கிடைக்கக் கூடிய லாபத்தை எதிப்பார்த்துத்தான். இப்படித்தான்புதிய லிபரல்வாதம் தீர்மானிக்கிறது தனக்கு எதன் மூலம் லாபம் கிடைக்கிறதோ, அதையே தீர்மானிக்கிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரான ஒஸ்கா வைல்ட் ஒரு பத்திரிகையாளரைச் சந்தித்தபோது கூறினார், நாம் கொடுமையான சமூகமொன்றில் வாழ்கிறோம் என்று. கொடுமையாளன் என்றால் என்னவென பத்திரிகையாளர் கேட்டார் . அதற்கு அவர், கொடுமையாளன் என்றால் எந்தப் பொருளினதும் மதிப்பை அறியாத, விலையை மட்டுமே அறிந்த நபராவார். என்றார். அதாவது எந்தப் பொருளினதும் மதிப்பை அறியமாட்டார். விலையை மட்டுமே அறிவார். எனினும் எந்தவொரு பொருளையும் வாங்கவோ, விற்கவோ முடியம். இப்போது அவ்வாறான மனிதர்கள் தான் உருவாக்கப்படுகின்றனர். எமக்கு இலங்கையின் சிங்கராஜ காட்டின் மதிப்பு தெரியாது. ஆனால் அதற்கான விலை தெரியும். நாம் காலிமுகத்திடலில் பட்டம் விடுகிறோம், .அதன் மதிப்பு தெரியாது. அதன் விலை தெரியும். அதனால்தான் "ஸ்ரங்கீ " போன்ற கம்பனிக்கு அதனை விற்கிறோம். எமக்குக் கல்வியின் மதிப்பு தெரியாது. அதன் விலை தெரியும். ஆகையால்தான் கல்வி விற்பனைப் பொருளாக்கப்பட



படிப்பகம்

www.padippakam.com



வேண்டுமென்ற வாத விவாதங்களள் நடக்கின்றன. அதனை விற்க வேண்டும், விலைக்கு வாங்க வேண்டுமென்கின்றனர். நாம் மனிதத் தொடர்ப்புகளுக்கு விலை மதிப்பிட்டுள்ளோம். அனைத்து மனிதத் பிணைப்புகளுக்கும் விலை குறித்துள்ளோம். நவ தாராளமய முதலாளித்துவம் , முதலாளித்துவ சமூகத்தை வீழ்ச்சியின் விளிம்பில் நிறுத்தியுள்ளது. இதிலிருந்து தப்பிப் பிழைத்த ஏராளமான மனிதர்கள் இருக்கின்றனர். அதனால்தான் இவ்வாறான உரைகளை நிகழ்த்த முடிந்துள்ளது. ஆனாலும், சமூகத்தில் பெரும்பாலானோர் இதற்குள் பலியாகியுள்ளனர். வெளிப்படையான சுயநலத்தைத் தவிர, மனிதர்களின் வாழ்வில் எதுவுமே இல்லை. மனிதர்களின் சிரிப்பு, நட்புறவு, மனிதநேயம் எல்லாமே போலியாக உள்ளது. சந்தர்ப்பவாதம் தான் திறைமையாகக் கருதப்படுகிறது. கொள்கை உறுதியோடு வாழ முடியாது. கொள்கை உறுதி கொண்ட மனிதர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் தோல்வி அடைந்த மனிதர்கள் என பச்சை குத்தப்படுகிறார்கள். கொள்கையை விட்டுவிட்டு லாபத்துக்காக அடிக்கடி நிறத்தை மாற்றக் கூடியவர்கள் இருப்பார்களாயின், அவர்கள்தான் இந்த நவ தாராளமய முதலாளித்துவத்துக்குள் வெற்றியடைந்த மனிதர்களாகக் கணிக்கப்படுவார்கள். அதுதான் திறைமை எனக் கூறப்படுகிறது. திறைமையான மனிதன் என்பது, கூச்சமின்றி கொள்கையை மாற்றும், காட்டிக் கொடுக்கும் நபர். இந்த முறைக்குள் அவ்வாறான நபர்களால் மட்டுமே வெற்றியடைய முடியும். அப்படியான ஒரு சமூகம் தான் உருவாக்கப்பட்டுள்ளது. மனச்சாட்சியை புதைத்து விடுவதால் மாத்திரமே நிலைத்திருக்க முடியும். இது தான் நபுதியலிபரல்வாத முதலாளித்துவத்தின் பண்பு.

இந்த முறைக்குள் 35 வருட காலம் நாம் வாழ்ந்துள்ளோம். எதிர்காலத்தில் இதனைனயும் விட மோசமான நிலையில் வாழ வேண்டிய நிலை வரும். ஏனெனில், நாம் இதுவரை முழுமையாக்கப்படாத நவ தாராளமய முதலாளித்துவத்துக்குள்ளேயே வாழ்ந்துள்ளோம்.



படிப்பகம்

www.padippakam.com

முழுமையான நவ தாராளமய முதலாளித்துவத்துக்குள் வாழவேண்டிய நிலை வரக்கூடும். எமது எதிர்கால சந்ததியினருக்கு அவ்வாறானதொரு சமூகத்தில வாழ வேண்டிய நிலை உருவாகும். எனவே இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய நேரம். இதற்குள் மனிதர்களின் மனச்சாட்சி அழிக்கப்படுகிறது. மனிதர்களை ஏமாற்றுவதும், மோசடி செய்வதும் தான் வாழ்வதற்கான ஒரே வழி எனப்படுகிறது. வாழ வேண்டுமானால் மற்றவரை ஏமாற்ற வேண்டும். மோசடி செய்ய வேண்டும். எல்லோரும் அதைத்தான் செயகிறார்கள். மற்றவரை அடிமைப்படுத்த ஏமாற்ற வேண்டும், பொருட்களைக் கொண்டு மனிதர்களை மதிக்கும், வெளிப்படையான சுயநலம் கொண்ட, அர்த்தமில்லாத ஒன்றுக்கும் உதவாத எடுத்துக்காட்டுகளின் பின்னால் ஓடுவதற்கு மட்டுமே புதிய லிபரல்வாத முதலாளித்துவம் எமக்குக் கற்றுத்தருகிறது. மனிதர்களுக்குத் தேவயான ஆளுமை என்னவென்பதையாவது எண்ணிப் பார்க்கவேண்டும். ஆசிரியர் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இங்கு இருப்பார்களென்றால் , பியாச்சே என்ற விஞ்ஞானியைப் பற்றி அவர்கள் அறிந்திருப்பார்களென நான் நினைக்கிறேன். அவர்களுக்கு சிறுவர் மனோத்ததுவம் குறித்து கற்பிக்கப் படுகிறது. பியாச்சே கூறுகிறார், ஆளுமை என்பது தன்னை அறிந்தக் கொள்வதாகும். ஒருவர் தன்னைப் பற்றி அறிந்து கொள்வது, தன்னுடைய பலவீனங்களைப் பற்றி அறிந்துக் கொள்வது. தனது ஆற்றல் குறித்து அறிந்து கொள்வது. தன்னைப் பற்றிய மதிப்பீடு குறித்து அறிந்துக் கொள்வது ஆகியவற்றுக்குப் பெயர்தான் ஆளுமை என்பதாகும்

இப்போது தொலைக் காட்சி அலை வரிசைகளில் சிறந்த பாடகர் தெரிவுக்கான நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றன. அந்தப் பாடல் போட்டிகளைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கிறது. இது ஒரு சமூக அவலம். போட்டியின் முதல் சுற்றில் பங்பேற்பவர்களில் இறுதிச்சுற்றுக்கு ஒரு சிலரே தெரிவாகின்றனர். முதல் சுற்றை நீங்கள் பார்த்திருப்பீகள், பாட முடியாதவர்கள்கூட அதில் பங்கேற்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



சுருதியோடு பாட முடியாதவர்களும் வருகின்றனர். அவர்களால் பாட முடியாது என்பதை அறிந்துக் கொள்ள சங்கீத் ஞானம் தேவையில்லை. எனக்கு இசை ஞானம் இல்லாவிட்டாலும் கூட , இவரால் பாட முடியாது எனக் கூற முடியும். பாட முடியாதவர்கள் பாடும் போது இவர்களால் பாட முடியாதென்பது மக்களுக்கு தெரிகிறது. அவர்கள் வெளியில் சென்று கூறுகிறார்கள், என்னால் நன்றாக பாட முடியும் பாட முடியாதெனக் கூறும் நடுவர்களுக்கு பைத்தியம் என்று. இதோ பாருங்கள் நான் அழகாகப் பாடுகிறேன் என்று பாடிக் காட்டுகிறார். ஆனால் சுருதி முழுமையாகவே பிழை. இப்படியான போட்டிகளில் 17, 18, 19, 20, லிருந்து 27 வயது வரையுள்ள இளைஞர் யுவதிகளே பெரும்பாலும் பங்கேற்கின்றனர். அவர்களுக்கு தமது ஆற்றல், ஆற்றலின்மை குறித்து அறிவையோ, அல்லது பியாசே கூறுவதைப் போன்று ஆளுமையையோ ஏற்படுத்த சமூகம் என்ற வகையில் நாம் தவறி விட்டோம். அது அந்த இளைஞர் யுவதிகளின் தவறல்ல. ஒரு முறை நடைபெற்ற ரியலிட்டி ஸோ ஒன்றில் போட்டியிலிருந்து நீக்கப்பட்ட ஒரு யுவதி வெளியில் அழுது கொண்டிருப்பதை நான் கண்டேன். கண்ணீர் வடித்தவாறு அவர் கூறினார், "எனக்கு வாழ்க்கையில ஒரு எதிர்ப்பார்ப்பு தான் இருந்தது. இறுதி 500பேரில் நானும் ஒருத்தியாத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே எனது எதிர்ப்பார்ப்பு . அதுவும் கனவாகி விட்டது. தற்கொலை செய்வது கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை." என்று. யாருக்காவது சுபர்ஸ்டார் ஆக வேண்டுமென்ற கனவு இருக்குமேயானால், அதனை எம்மால் விளங்கிக் கொள்ள முடியும். ஆனால், யாருக்காவது வாழ்க்கையில் இருந்த ஒரே எதிர்பார்ப்பு 500 பேரில் ஒருவராக வரவேண்டும் என்பதாக இருந்தால், அது பெரிய பிரச்சினைதான். அதாவது வாழ்க்கையின் நோக்கம் ஏதாவத ஒரு போட்டியில் இறுதி 500 பேரில் ஒருவராக வர வேண்டும் என்பதாக இருந்தால், அதைத்தவிர .வாழ்க்கையில் வேறு குறிக்கோள், வேறு நம்பிக்கைகள் இல்லையென்பது பெரிய



படிப்பகம்

www.padippakam.com

பரிதாபம்.

சிந்தித்துப் பாருங்கள், எமது சமூகம் எப்படியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதென்று. புதிய பரம்பரை அனாவசிமான பொருட்களை பயன்படுத்துவதையும், அர்த்தமில்லாத களியாட்டங்களையும் தமது உதாரணங்களாக எடுத்துக்கொண்டுள்ளனர். அப்படியான சூழல்தான் உருவாக்கப்பட்டு வருகிறது. உருவாகியிருக்கிறது. ஒட்டுமொத்த சமூகமும் இதற்குள் தள்ளப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் தான் இடதுசாரிகளுக்கான சவால் தோன்றுகிறது. இடதுசாரி இயக்கம் இந்த அழிவிலிருந்து சமூகத்தை எவ்வாறு மீட்டெடுக்கும்? இது மூலதன மற்றும் நடைமுறை கணக்குகள் சம்பந்தமான பிரச்சினையல்ல. இது மனித நேயம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. புதியலிபரல்வாதம் முதலாளித்துவம் எமக்குள் மனித நேயப் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இச்சந்தர்பத்தில், நாம் சமூகத்தின் முச்சந்தியில் நிறுத்தப்பட்டுள்ளோம். நாம் எங்கே செல்வது? மனித நேயத்தை நோக்கிச் செல்வதா? இல்லையாயின், மனித வேடத்தில் இருக்கும் மிருகங்களைப் போன்று மிலேச்சத்தனத்தை நோக்கிச் செல்வதா? இதன் முன்னிலையில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டியிருக்கிறது. வெறுமனே அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பிக்கொண்டிருக்க முடியாது. அரசாங்கத்தக்கு எதிரா கோஷங்களை எழுப்பிக் கொண்டு, அரசாங்க எதிர்ப்புச் சக்திகளை சந்தோசமடையச்செய்ய முடியாது. இந்த சமூகத்துக்கு சரியான பாதையைக் காட்டுவதற்காகவே இடதுசாரி இயக்கம் தேவைப்படுகிறது.

இந்தச் சமூகம் முச்சந்தியில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளது. எமது சமதாயமும், எமது எதிர்கால சமுதாயமும், அதற்குப் பின்னர் வரும் சமுதாயமும், எம்மை விட அதிகமான மிலேச்சத்தனத்தை நோக்கி தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. மனித தோற்றம் கொண்ட



படிப்பகம்

www.padippakam.com



மிருகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு முன்னால் இடதுசாரிகள் என்ன செய்துக்கொண்டிருக்கிறார்கள்? மக்கள் ஆடம்பரப் பொருட்களுக்குள் மூழ்கியிருக்கிறார்கள். வீடொன்றுக்காக, வாகனமொன்றுக்காக, தொலைக்காட்சி பெட்டி ஒன்றுக்காக துணி துவைக்கும் மெசின் ஒன்றுக்காக முழு வாழ்க்கையையும் தியாகம் செய்கிறார்கள். அத்தியாவசியமில்லாத, போலியான வேலைகளுக்காக ஆயிரக்கணக்கான மக்கள் தமது வாழ்நாளை தியாகம் செய்துள்ளார்கள். பிரச்சினை ஒன்று இருக்கிறது. இடதுசாரி இயக்கத்தின் முன்னால் இருக்கும் சவால் அதுதான். இந்த அழிவுக்கு முன்னால் இடதுசாரி இயக்கம் என்ன செயதுக் கொண்டிருக்கிறது.? இடதுசாரிகள் இயக்கம் சமூகத்துக்கு வழங்கும் தலைமைத்துவம் எத்தகையது. அதுதான் பிரச்சினை. இதன்போதுதான் தோழர் விஜேவீர திரைப்படத்திலிருந்து மேற்கோள் காட்டியது நினைவுக்கு வருகிறது. போவது எங்கே எனத் தெரியாமல் போகும் பாதையை தெரிந்து வைத்திருப்பது, போவது எங்கே எனத் தெரிந்து, போகும் பாதை தெரியாமலிருப்பதை விடவும் பயங்கரமானதாகும். என படத்தின் கதாநாயகன் கூறுவதாக தோழர் விஜேவீர கூறியிருந்தார். பிரச்சினையே அதுதான். மெ் முன்னால் உள்ள பிரச்சினை அதுதான். சமுதாயத்தில் பெரும்பாலானவர்கள், எங்கே செல்வது எனத் தெரியாமல் உள்ளனர். இலங்கையின் இடதுசாரி இயக்கம் போவது எங்கே எனத் தெரியாமல் இருந்ததோடு, எப்படிப் போவது என்பதைப் பற்றியும் தெரிந்து வைத்திருக்க வில்லை.

எனவே, நான் உட்பட இந்த மேடையில் அமர்ந்திருக்கும் அனைத்துத் தோழர்களும், இடதுசாரி செயற்திறன் கொண்ட உறுப்பினர்கள் என்ற வகையில், எம்மால் ஏற்பட்ட சில குறைபாடுகளை ஏற்றுக் கொள்ளுமளவுக்கு நாம் துணிவு பெற்றுள்ளோம். புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் பிற்போக்குத்தனத்திலிருந்து இடதுசாரி இயக்கத்தால் மீள முடியவில்லை என்பதை ஏற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளக்கூடிய துணிவும் எமக்கு இருக்கின்றது. எமக்குத் தவறிவிட்டது என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனோதிடமும் எமக்கு இருக்கின்றது. அந்தத் மனோதிடம் இல்லாத இடதுசாரி இயக்கமொன்றால் சமூகத்துக்கு தலைமைத்துவமளிக்க முடியாது. எனவே சமூகத்தின் மத்தியில் இந்தப் பிரச்சினை குறித்து பேச வேண்டும். இடதுசாரி இயக்கத்துக்கு என்ன நடந்தது? இடதுசாரி இயக்கம், புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தோடு போராடியதோடு, முதலாளித்துவத்திற்கு பலியாகியது. அது வரலாற்றில் ஏற்பட்ட பாரதூரமான சம்பவம். புதிய லிபரல்வாதம் வேண்டாமென பதாதைகளை கையில் ஏந்திக் கொண்டு, முதலாளித்துவத்துக்குப் பலியானோம். அதுதான் பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இலங்கையில் உண்மையான இடதுசாரி இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாது. நவ தாராளமய முதலாளித்துவ மனிதன், அந்த கொடுமையான, சுயநலம் காக்கும் அர்த்தமில்லாத மனிதன் சிகப்புச் சட்டையை அணிந்த மாத்திரத்தில் அவன் இடதுசாரியாகமாட்டான். இடதுசாரி என்பவன், தனது வாழ்க்கையில், எடுத்துக் காட்டுதல்களோடு வாழும் வித்தியாசமான மனிதன். இடதுசாரி இயக்கம் என்பது, அப்படியான உதாரண புருஷர்களைக் கொண்ட அமைப்பு. நான் ஏற்கனவே கூறியதைப் போன்று, மனச்சாட்சி இல்லாத, · அர்த்தமில்லாத களியாட்டங்களளில் மூழ்கியுள்ள பொருட்களின் மீது அதீத கவனம் செலுத்தும் தில்லு முல்லுகள் வாயிலாக வெற்றியைத் தேடும் கொடுமையான மனிதன் சிகப்புச் சட்டையை அணிவதால் மட்டும் இடதுசாரியாகப் போவதில்லை.

இலங்கையின் இடதுசாரி இயக்கம் இதனை அறிந்து கொள்ளாததுதான் பிரச்சினை. புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தோடு போராடுவதாக நாம் நினைத்தோம். திரும்பிப் பார்த்தபோது, நாம் புதிய லிபரல்வாத முதலாளித்துவத்திற்கு பலியாகியிருந்தோம். அது எதைப் போன்றதெனில், - நீங்களும் அறிந்திருப்பீர்கள் என நினைக்கறேன்.- மகா அலக்ஸாண்டர்



படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவை ஆக்கிரமித்ததைப் போன்று. மகா அலக்ஸாண்டர் படையோடு வந்து இந்தியாவைப் பிடித்துக் கொண்டார். இந்தியாவைப் பிடித்துக்கொண்டதன் பின்னர். அங்கு பாம்பாட்டுவது, மை வெளிச்சம் பார்ப்பது, சாத்திரம் பார்ப்பது போன்றவை எல்லா இடங்களிலும் இருப்பதைக் கண்டார். இதனால் கவரப்பட்ட சர்வாதிகாரி அலக்ஸாண்டர், அவற்றை அப்படியே கிரேக்கத்தில் அறிமுகப் படுத்தினார். இது குறித்து கில்பட் மரே என்ற ஐரோப்பிய வரலாற்றாசிரியர் கூறும்போது, சாவாதிகாரி அலக்ஸாண்டர் இந்தியாவைக் கைப்பற்றியதன் பின்னர், கிரேக்கம் பாரிய கலாசார வீழ்ச்சிக்குள் தள்ளப்பட்டது. வானிலிருந்து திடீரென வீழ்ந்த எரி நட்சத்திரங்களைப் போன்று பாரிய மூட நம்பிக்கைகள் கிரேக்கத்தில் திடீரென வேரூன்றத் துவங்கின. முன்னர் சோக்ரடீஸ்கள், பளேட்டோக்கள், சுற்றித்திரிந்த ஏதென்ஸ் நகர வீதிகள் தோரும் குறி சொல்வோர், கைபார்த்து சாத்திரம் சொல்வோர் குவியத் துவங்கினர். கிரேக்கத்துக்களும் சர்வாதிகாரி அலக்ஸாண்டருக்கு எதிராக கிளர்ச்சி தலை தூக்கியது. இந்திய கலாசார ஆக்கிரமுப்புக்கு எதிராக கிரேக்க கலாசாரத்தை பாதுகாப்பது என்று கூறி கிளர்ச்சியொன்று ஏற்பட்டது. இறுதியில், அரிஸ்டோடல் போன்றவாகள் கிரேக்கத்திலிருந்து தப்பி ஓட வேண்டிய நிலை உருவானது. எனவே வரலாறு என்ன கூறுகிறதென்றால், உண்மையிலேயே அலக்ஸாண்டர் இந்தியாவைக் கைப்பற்றினாரா? அல்லது இந்தியா அலக்ஸாண்டரைக் கைப்பற்றியதா? என்று. அது இன்றுவைரை விடை காண முடியாத கேள்வியாகவே உள்ளது. இந்தியாவை பௌதீக ரீதியில் கண்ட பின்னர் சர்வாதிகாரி அலக் ஸாண்டர் படையோடு சென்று இந்தியாவை அடிமைப்படுத்தினார் என்று கூறப்படுகிறது. ஆனால், உண்மையிலேயே நடந்தது என்னவென்றால், இந்தியக் கலாசாரம் சர்வாதிகாரி அலகஸாண்டரை அடிமையாக்கிக் கொண்டது. இந்தியாவோடு போரிட்ட அலகஸாண்டர் இந்திய கலாசாரத்துக்குப் பலியானார்.



படிப்பகம்

www.padippakam.com

அதைப் போன்று, நவ தாராளமய முதலாளித்துவத்தோடு 35 வருட காலம் போராடிய நாம் , பதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் பலிக்கடாவாகியுள்ளோம் என்பதை அறிந்து கொள்ளாமல், அது குறித்து சமூகத்தோடு உரையாடாமல், அதற்குத் தேவையான நெஞ்சுறுதியும் துணிவும் இல்லாமல் இடதுசாரி இயக்கம் நிலைத்திருக் முடியாது. தவறு நடந்த பிறகு அந்தத் தவறை ஏற்றுக் கொள்வதாயிருந்தால் அதற்குள் தான் இடதுசாரி இயக்கத்தின் பண்பு இருக்கிறது.

தற்போது ஐரோப்பாவில் சோஷலிஸம் குறித்து பாரிய கருத்தாடலொன்று நடைபெற்று வருகிறது. ஐரோப்பாவிலுள்ள முதலாளித்துவ சிந்தனையாளர்கள் சோஷலிஸம் தவறானது என்ற கூற்றுக்கு பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர். அவர்கள் முன்வைக்கும் முக்கியமான கருத்து என்னவென்றால், பீதி பயம், அச்சம். ஹிட்லரால் படுகொலை செய்யப்பட்ட மனிதர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக ஸ்டாலினும் கொலை செய்துள்ளார் என்பதை எண்ணிக்கையில் நிருபித்துக் காட்டுகின்றனர். எனவே, சோஷலிஸம் என்பது நாஸி வாதத்தைப் போன்றதுதான் எனக் கூறுகினறனர். அதேபோன்று ஐரோப்பிய இடதுசாரி புத்திஜீவிகள் இந்த பீதி அரசியலுக்கு பதிலளிக்கினறனர். ஒரு சிந்தனையாளர் இந்த பீதி அரசியலுக்கு நல்லதொரு பதிலைக் கொடுத்திருந்தார். அவர் அதற்கு உதாரணமாக, "குட்பை லெனின் " என்ற ஜர்மனிய திரைப்படத்தைத் தெரிவு செய்திருந்தார். இலங்கையிலும் அந்தத் திரைப்படம் பிரபலமடைந்திருந்தது. திரைப்படத்தைப் பார்க்காதவர்களுக்காக அதனை சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஜேர்மனியப் புரட்சியில் பங்கேற்ற வயதான மூதாட்டி ஒருவர் இருக்கிறார். அவர் கடுமையான மாக்ஸீயப் போக்குடையவர். ஜேர்மனிய சோஷலிஸத்தை வெகுவாக நேசித்தவர். அவருக்கு அடிக்கடி மயக்க நிலை ஏற்படும். ஒருமறை நினைவிழந்த நிலையில் இருக்கம்போது பர்லின் சுவர் இடிக்கப்பட்டு, கிழக்கு



படிப்பகம்

www.padippakam.com



ஜேர்மனியில் சோஷலஸம் சரிந்தது.. (1991) மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவருக்கு சோஷலிஸம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் நினைவு திரும்புகிறது. மயக்க நிலையில இருந்த போது அவர் சோஷலிஸ நாட்டில் இருந்தார். நினைவு திரும்பிய பின்னர் அவர், சோஷலிஸம் வீழ்ச்சியடைந்த முதலாளித்துவ ஜேர்மனியில் இருந்தார். பின்னர் மூதாட்டியின் மகனிடம் மருத்துவர் கூறுகிறார், தற்போது அம்மாவின் உடல் நிலை மிக மோசமாக உள்ளது. அவரது மனதை நோகடிக்க வேண்டாம். அவரது மனதுக்கு தாக்கத்தை ஏறபடுத்தக் கூடிய எதையுமே கூற வேண்டாம் என்று. அம்மாவுக்கு பெரியளவு தாக்கம் எதனால் ஏற்படுகிறது என மருத்துவர் கேட்டார். அம்மா சோஷலிஸத்தை வெகுவாக நேசிக்கிறார், சோஷலிஸம் வீழ்ந்து விட்டது என்று கூறினால் அம்மாவுக்கு பெரிய அதிர்ச்சி ஏற்படும் என்று மகன் கூறினார். இப்போது அம்மாவை வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள் சோஷலிஸம் வீழ்ச்சியடைந்தது குறித்து கடுகளவேனும் தெரியாதவாறு அவரைக் கவனித்துக் கொள்ளுங்கள் என மருத்துவர் கூறினார். எனவே, இது சோஷலிஸ ஜேர்மனி தான் என்பதை விளக்க மகன் பெரும்பாடு படுகிறார். முழு திரைப்படத்திலும் அதுதான் கதை. வீட்டின் வரவேற்பறை, ஏனைய அறைகள் சாளரங்கள் ஆகிய அனைத்து இடங்களிலும் சோஷலிஸம் இருப்பதறகான அறிகுறிகளைக் காட்ட மகன் பெரு முயற்சி எடுக்கிறார். அம்மா எழுந்து சாளரத்தைத் திறந்தால் அங்கே முதலாளித்துவம் தெரியும், தொலைக் காட்சிப் பெட்டியை இயக்கினால் முதலாளித்துவம் தெரியும் என்பதால் ஒரு தந்திரோபாயத்தைத் கையாள்கிறார் . கீழே. கராஜில் இருக்கம் , தன்னைக் காதலிக்கும் யுவதியை தொலைக் காட்சி அறிவிப்பாளராக வைத்து செய்தி வாசிக்கிறார். தொலைக் காட்சி பெட்டியை இயக்கும் போது தொலைக் காட்சி இயங்காது மகனுடைய டேப் ரெகாடரே இயங்கும்.

பகல் நேரங்களில் அம்மா காணும் காட்சிகளுக்கெல்லாம் இரவு



படிப்பகம்

www.padippakam.com

செய்தி வாசிப்பின் போது பதில் கிடைக்கும். இங்கிருப்பது சோஷலிஸம் தான் என்பதற்கு செய்திகள் மூலம் பதில் கிடைக்கிறது. திரைப்படம் முழுவதும் இப்படித்தான் நகர்கிறது. உதாரணத்திற்கு, ஒரு கட்டத்தில் பேர்லின் சுவர் உடைந்திருப்பதை அம்மா காண்கிறார். உடைந்த பகுதியால் மக்கள் அங்குமிங்கும் செல்கிறார்கள். பின்னர் மகனிடம் கேற்கிறார் பேர்லின் சுவர் உடைந்துள்ளதா? அது எப்படி உடைந்தது என்று. அதுதான் சோஷலஸத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையில் கட்டப்பட்டிருந்த சுவர். அது எப்படி உடைந்தது என்று எனக்குத் தெரியாது நான் தேடிப்பார்க்கிறேன் என்று மகன் கூறுகிறார். இரவு செய்தி வாசிக்கப்படுகிறது, மகனால் பதிவு செய்யப்பட்ட செய்தி வாசிக்கப்படுகிறது. மேற்கு ஜேர்மன் மக்கள் முதலாளித்துவத்துக்குள் தமது வாழ்நாள் முழுவதையம் போட்டிக் களமாக அமைத்துக் கொண்டு, பணம் தேடித் தேடி பொருட்களை வாங்கி வீட்டில் நிறைத்துக் கொண்டு, பொருட்களுக்குள் பொருட்களாக மாறி, சோர்வுற்றதன் பின்னர், அவர்களுக்கு விளங்கியிருக்கிறது, வாழ்க்கை என்பது வீட்டுக்குள் பொருட்களைக் குவித்துக் கொண்டிருப்பது அல்ல, வீட்டைக் கட்டுவதல்ல, வாழ்க்கையில் வேறு குறிக்கோள்களும் மனிதர்களுக்கு இருக்கிறது. என்பதை கருத்தில் கொண்ட அவர்கள் உண்மையான வாழ்க்கையைத் தேடி, வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளைத் தேடி மதிலை உடைத்துக் கொண்டு சோஷலிஸ ஜேர்மனிக்குள் வருகிறார்கள் அதுதான் செய்தியாக வாசிக்கப்படுகிறது. உண்மையிலேயே நடப்பது என்னவென்றால், கிழக்கு ஜேர்மன் சோஷலிஸவாதிகள் மதிலை உடைத்துக் கொண்டு ஆடம்பரவ வாழ்க்கைக்காக கொகாகோலாவும், டெனிமும் வேறு பொருட்களும் தேடி மேற்கு ஜேர்மனிக்குச் சென்றார்கள். உண்மையிலேயே அதுதான் நடந்தது. அந்தக் கதையை எழுதியவர் எதைச் சொல் வருகிறார் என்றால், -திரைப்படத்தின் இயக்குனர் ஒரு மாக்ஸியவாதி- நாங்கள் அமைத்த சோஷலிஸம் இப்படியிருந்தால்



படிப்பகம்

www.padippakam.com



நன்றாக இருக்குமென்று. ஏற்கனவே இருந்ததைப் போன்றதல்ல. இதோ, இப்படி இருந்தால் நன்றாக இருக்குமென்று. ஜேர்மன் மாக்ஸியவாதிகளுக்கு ஜேர்மனியில் அமைத்த சோஷலிஸம் குறித்து இருக்கும் சுய விமர்சனம் தான் இந்த திரைப்படத்தின் மூலம் காட்டப்படுகிறது என்று. ஆகவேதான் அவர் கூறுகிறார், ஜேர்மனிய மார்க்ஸ் வாதிகளுக்கு நடக்க வேண்டிய அனைத்தும் நடந்து விட்ட பிறகு, சோஷலிஸத்தை அமைத்து, சோஷலிஸ மும் வீழ்ந்து விட்ட பிறகு, மீண்டும் வந்து நாம் தவறிழைத்து விட்டோம், இதோ இந்த இடத்தில் தான் தவறியது, நாம் அவ்வாறு செய்திருக்கக் கூடாது, நாம் இப்படித்தான் செய்திருக்க வேண்டும். என்று "குட்பாய் லெனின்" என்ற திரைப்படத்தைத் அவரால் தயாரிக்க முடிந்தது. ஆனால், ஜேர்மனியிலுள்ள ஒரு நாஸ வாதியால் "குட்பாய் ஹிட்லர் " என்று ஒரு திரைப்படத்தைத் தயாரிக்க முடியாது. நாம் தவறிழைத்து விட்டோம், நாம் வதை முகாம்களில் யூதர்களை படுகொலை செய்தது தவறு, அண்டை நாடுகளை ஆகிரமித்து மக்களை படுகொலை செய்தது தவறு என்று கருத்துப்பட எந்த நாஸிவாதியாலும் ஒரு திரைப்படத்தைத் தயாரிக்க முடியாது. நாஸிவாதிக்கும், இடதுசாரிக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், தவறு நடந்ததன் பின்னர், மக்கள் முன் வந்து, நாம் தவறிழைத்துவிட்டோம், எதிர்காலத்தில் நாம் அந்தத் தவறைச் செய்ய மாட்டோம், என்று கூறுவதற்கு இடதுசாரிகளுக்கு துணிவு இருக்கிறது. நாஸிகளுக்கு அது கிடையாது. இலங்கையின் இடதுசாரி இயக்கத்திற்கு அந்தத் துணிவு வேண்டும். நாம் தவறிழைத்து விட்டோம், அந்தத் தவறை நாம் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுமளவுக்கு தைரியம் எமக்கு வேண்டும்.

எங்களுக்குத் தவறியிருக்கிறது. அது பாரதூரமான தவறு, நாங்கள் புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தோடு போராடுகிறோம். நவ தாராளமய முதலாளித்துவம் என்பது ஏழு தலையுள்ள பிராணியைப் போன்றது. கிரேக்க தெய்வக் கதைகளில் ஏழு



படிப்பகம்

www.padippakam.com

தலைகளைக் கொண்ட பிராணியொன்று வருகிறது. நாம் ஒரு தலையோடு போரிடும் போது ஏனைய தலைகள் வந்து எம்மை கவ்விக் கொள்கின்றன. நாம் புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் ஒரு தலையோடு போராடிக் கொண்டிருக்கும் போது, எனைய தலைகள் வந்து எம்மைக் கவ்வுகின்றன. எனவே, இடதுசாரி இயக்கம் என்ற வகையில் நாம், புதிய லிபரல்வாதத்தில் சிக்குண்டுள்ளோம். அந்த புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் அர்த்தமற்ற உதாரணங்கள்தான் இடதுசாரி இயக்கத்துக்குள் தொடர்ந்து நிலை கொண்டுள்ளது. அதனால் தான் இடதுசாரிகள் இயக்கம் ஊடகக் கண்காட்சிகளுக்கும் அப்பால் சென்ற மக்கள் அரசியலில் இறங்கவில்லை. எனவே, நீங்கள் செய்யும் அரசியல் எத்தகையது என்று யாராவது கேட்டால், எமது அரசியல், மாதத்திற்கு 12 ஊடக சந்திப்பு, 3 கருத்தரங்குகள் , மற்றும் இரண்டு பத்திரிகைகள் என்று கூற வேண்டியுள்ளது. ஆதலால் உண்மையிலேயே மக்கள் மத்தியில் இறங்காமல் மக்கள் மத்தியில் வேலை செய்யாமல், மக்களின் எண்ணக் கருவை மாற்றி தாமும் மாறாமல், இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாகக் காட்டப்படும் ஊடக கண்காட்சிகளை நடத்துவதுதான் அரசியல் என்ற எண்ணக்கரு இடதுசாரி இயக்கத்துக்குள் எழுகிறது. நவ தாராளமய முதலாளித்துவம் அப்படியான நபர்களைத்தான் உருவாக்குகிறது. நவ தாராளமய முதலாளித்துவத்தில் ஆழமாக ஊன்றியிருப்பவர்களை முதலாளித்துவம் பிடித்துக் கொள்வதில்லை. இவர்கள் மேலோட்டமாக கண்காட்சிகளினால் பிடிக்கப்படும் மனிதர்கள். பொருட்கள் மீதான பேராசைக்குள் வீழ்ந்ததனால் தான் நாம் சமூக பிற்போக்கோடு மோதாமல், எமது திட்டங்களுக்காக சமூக பிற்போக்குத்தனத்தை முகாமைத்துவப் படுத்தும் நிலை ஏற்படுகிறது.

இனவாதம் என்பது மோசமான சமூக பிற்போக்குத்தனம். எங்காவது ஒரு மூலையில் இனவாதம் இருக்குமேயானால், - அது



படிப்பகம்

www.padippakam.com



சிங்கள இவாதமாக இருந்தலும், தமிழ் இனவாததமாக இருந்தாலும் அல்லது வேறு இனவாதமாக இருந்தாலும்- இதோ, இந்த புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் ஊடாக வரும் பயனீட்டுவாத கோட்பாட்டின் காரணமாகத்தான், இந்த இனவாதத்தோடு மோதுவதற்குப் பதிலாக, இங்கு இனவாதம் இருக்கிறது, இதை சமாளித்துக் கொண்டால், பிழைத்துக்கொள்ள முடியும், இதனை சமாளித்துக் கொள் முடியும் என்ற மனோபாவத்துக்குள் வீழ்ந்தது. ஆதலால்தான், உண்மையிலேயே, இந்த சமூகத்தோடு, இந்த சமூக வாழ்க்கையோடு, நாம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் விதம் குறித்து பேச்சுக்கள் நடத்துவதை விட்டுவிட்டு, தில்லுமுல்லு செய்து ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கப்படுகிறது. அதற்குள் இருந்துதான் வர்க்க ஒத்துழைப்புவாதம் தோன்றுகிறது. சீர்த்திருத்தவாதமும் புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின் ஒத்துழைப்புவாதமும் அங்குதான் இருக்கிறது. இடதுசாரிகள் இயக்கம், மக்கள் விடுதலை முன்னணி உற்பட நாம் அனைவரும் உடன்பாட்டு அரசியலுக்குள் வீழ்ந்துள்ளோம். உடன்பாட்டுவாதம் குறித்து லெனின் இவ்வாறு கூறுகிறார், கொள்கையின் அடிப்படையில் உறுதியாக காலூன்றாமல், ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் ஏற்றவாறு முகம் கொடுப்பதற்காக கொள்கைகளை மாற்றிக் கொள்வதே உடன்பாட்டுவாதமாகும்.

இந்த நவ தாராளமய முதலாளித்துவம் கூறுகிறது, நீங்கள் நிலைத்திருக்க வேண்டுமானால், கொள்கையை விடட்டுவிடுங்கள், மனச்சாட்சியை கைவிடுங்கள் என்று. அந்த ஆணைக்கு எதிராகவே நாம் மோத வேண்டும். அந்தக் ஆணைக்கு எதிரான போராட்டமொன்று இருக்கிறது. அந்த ஆணைக்கு எதிராகப் போராட இந்த அமைப்புக்கு தூரநோக்கு இருக்க வேண்டும். அதை விட்டு விட்டு நாம் என்ன செய்கிறோமென்றால், நவ தாராளமய முதலாளித்துவம் வேண்டாமென்று பதாதைகளைத் ஏந்திக்கொண்டு திரிகிறோம். அந்தக் உத்தரவுக்கு நாம் அடிபணிந்து விட்டோம்.



படிப்பகம்

www.padippakam.com

ஆகவே, மனச்சாட்சியை அடகு வைக்குமாறும், கொள்கையைக் கைவிடுமாறும் கூறும்போது நாம் அதற்கு அடிமையாகி விட்டோம். அதனால் தான் இவ்வாறான பிரச்சினைகள் எழுகின்றன. ஆகவே, முறையை மாற்றும் அரசியலுக்குப் பதிலாக முறையை புதுப்பிக்கும் அரசியலுக்குள் பெயரளவிலான இடதுசாரி இயக்கம் வீழ்கிறது. சமூக ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராடி, சமூகத்தை மாற்றியமைக்கும் அரசியலுக்குப் பதிலாக சமூக ஒடுக்குமுறைகளை போஷிக்கும் அரசியலுக்குள் வீழ்வதும் அதனால் தான். சமூகத்தின் பலவீனங்கள் குறித்து நேரடியாகப் பேசாமல், இதோ, இவர்கள்தான் புத்திசாலி மக்கள் என்று கூற வேண்டிய நிலை எமக்கும் ஏற்படுகிறது. முதலாளித்துவ அரசியலவாதிகள் தான் புத்திசாலி மக்கள் என்று கூறினார்கள். இடதுசாரிகள் எப்போதுமே புத்திசாலி மக்கள் என்று கூறியதில்லை. இடதுசாரிகள் மக்களோடு சரியான முறையில் உரையாடினார்கள். உங்களுக்குப் புரியாது, நீங்கள் புத்திசாலிகளல்ல், நீங்கள் வாழ்க்கையை தொலைத்துள்ளீர்கள் என்று கூறினார்கள். அப்படிக் கூறக்கூடிய துணிவு மறைந்துவிட்டது. மக்கள் வாக்களிக்காமல் இருந்துவிடுவார்களோ என்ற பயத்தால் தான் மக்களைப் பார்த்து நீங்கள் புத்திசாலிகள் என்று கூறுகின்றனர். முதலாளித்துவத்தின் வலைக்குள் இடதுசாரிகள் சிக்கியதுதான் அதற்குக் காரணம். இது இலங்கையில மாத்திரம் நடந்த ஒன்றல்ல. உலக மட்டத்தில், இடதுசாரி இயக்கம் புதிய லிபரல்வாத முதலாளித்துவக்குள் சிக்கிக் கொண்டது.

சகபோக வாழ்க்கைக்கு அடிமையாகியது. அதற்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை. சீனாவை எடுத்துக் கொண்டாலே போதும் சூடானிய பிரச்சினையின்போது, வடக்கு சூடானையும் தெற்கு சூடானையும் ஏகாதிபத்தியவாதிகள் பிரித்ததற்கான காரணம், தெற்கு சூடானிலுள்ள எண்ணெய் வளம் சீனாவினால் பயன்படுத்தப்பட்டமைதான். அந்தப் பிரச்சினையின்போது சீனா உதவிக்குவரும் என்று பசீருடைய அரசாங்கம் உறுதியான



படிப்பகம்

www.padippakam.com



நம்பிக்கையோடு இருந்தது, இறுதியாக, நடந்தது என்னவென்றால், தெற்கு சூடான் உருவானதன் பின்னர் அதனை ஏற்றுக் கொண்ட முதல் ஐந்து நாடுகளில் சீனாவும் ஒன்றாக இருந்தது.

ஏகாதிபத்திய ஆக்கிரமுப்புக்கு எதிராக சீனா உதவிக்கு வரும் என லிபியாவின் கடாபி எதிர்பபார்த்தார். சீனா லிபியாவின் நட்புநாடு என்பதால், சீனா உதவிக்கு வரும் என கடாபி உறுதியாக நம்பினார். சீனா உதவிக்கு வரவில்லை. கடாபிக்கு எதிரான கிளர்ச்சித் தலைவர் தனது முதலாவது ராஜதந்திர பயணத்தை சீனாவுக்கே மேற்கொண்டார். யார் வெற்றி பெறுவார்கள் என சீனா எதிர்ப்பார்த்திருந்தது. சீனா சாதாரண நாடொன்றல்ல. சீனாவை ஆட்சி செய்து கொண்டிருப்பது கம்யூனிஸக் கட்சி. இந்த யுத்தத்தில் யார் சரி, யார் தவறு, யார் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும், யாருக்கு உதவ வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்கவில்லை. யார் வெற்றி பெறுவார்கள் என்றுதான் சீனா பார்த்தது. கடாபி வெல்லும் போது கடாபியுடன் இருப்பது, நேட்டோ படையின் ஒத்துழைப்பைப் பெற்ற நபர் வெல்லும்போது அவருடன் இருப்பது. இவற்றையெல்லாம் நோக்கும்போது, உலக மட்டத்தில் இடதுசாரிகள் இயக்கம் புதிய லிபரலிவாத முதலாளித்துவத்துக்குள் வீழ்ந்துள்ளது தெரிகிறது.

1978ல் தோழர் ரோஹன விஜேவீர, "சந்தர்ப்பவாதமா? பாட்டாளி வர்க்க சர்வதேசமா? என்ற தனது நூலில் இது குறித்து கூறியுள்ளார். சோவியத் தேசமா? சீனாவா? அவர்கள் அறிமுகப்படுத்தியிருப்பது விழ்ச்சியடைந்த தொழிலாளர் அரசுகளே என்று. எனவே, இடதுசாரிகள் இயக்கம் இவ்வாறு படிப்படியாக புதிய லிபரல்வாத முதலாளித்துவத்துக்கு பலியாகி வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நவ தாராளமய முதலாளித்துவத்துக்கு எதிரான இந்த பலவீனங்களை ஒதுக்கிவிட்டு இடதுசாரி இயக்கங்கள் போராட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

சிலர் தேசியவாதத்தை உயர்த்தப் பார்க்கின்றனர். சம்பிக ரணவக போன்றவர்கள் இந்த நவ தாராளமய முதலாளித்துவத்திற்கு எதிராக தேசிய மட்டத்திலான அமைப்பை உருவாக்கப் போகிறார்களாம். பத்திரிகைகளில் பார்த்தோம். ரணில் விக்கிரமசிங்க, சமூக ஜனநாயக அமைப்பொன்றை உருவாக்க முயற்சிக்கிறார். தேசியவாதிகளாகட்டும், போலி சமூக ஜனநாயகவாதிகளாகட்டும் இந்த புதிள லிபரல்வாத முதலாளித்துவத்தினால் ஏற்பட்ட அழிவை நிவர்த்திக்க முடியாது. தேசியவாதம் இறுதியாக , புதிய லிபரல்வாத முதலாளித்துவத்திற்கு போஷாக்கு ஊட்டிவிட்டுத்தான் திரும்பும். ஏனெனில், இவர்களது இந்த தேசாபிமான கொடி என்பது போலியானது. அதற்கான சக்தி புதிய லிபரல்வாத முதலாளித்துவத்திடம் கிடையாது. லத்தீன் அமெரிக்காவில் அதுதான் நடந்தது. லத்தீன் அமெரிக்காவில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மக்கள் எழுச்சியொன்று காணப்பட்டது. அந்த எழுச்சியோடு அதிகாரத்திற்கு வந்தவர்கள், ஏகாதிபத்திய விரோதிகள் என தம்மை அடையாளம் காட்டிக் கொண்டனர். ஆனால், புதிய சுற்றில் புதிய லிபரல்வாத முடுதலாளித்துவம் நிலை நாட்டப்பட்டது. பொலீவியா, ஆஜன்டீனா உருகுவே. பராகுவே உள்ளிட்ட ஹய்டியைப் போன்ற நாடுகளுக்குள் புதிய சுற்றில் நவ தாராளமய முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்டு விட்டது. ஏகாதிபத்திய கம்பனிகளோடு மோதல் இருப்பது என்னவோ உண்மை. தேசிய முதலாளிகள் அந்த நாடுகளை புதிய லிபரல்வாத முதலாளித்துவத்துக்குள் முழுமையாக இட்டுச் சென்றுள்ளனர். இறுதியாக புதிய லிபரல்வாத முதலாளித்துவத்திற்கு மற்றும் ஏகாதிபத்தியத்திறகு உலக முதலாளித்துவ நிகழ்ச்சி நிரலுக்கு எதிரில் ஒடுக்கப்பட்ட மக்களின் நிகழ்ச்சி நிரல் காட்டிக் கொடுக்கப் பட்டுள்ளது. ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு அடிபணிவதைத்தான் சமூக ஜனநயாகம் என கூறப்படுகிறது. அந்த சமூக ஜனநாயத்தால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. சோஷலிஸத்தின் மூலமாக மட்டுமே சமூகப்



படிப்பகம்

www.padippakam.com



பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். தேசியவாதிகளாலோ, சமூக ஜனநாயகவாதிகளாலோ தீர்வு காண முடியாது. நவ தாராளமய முதலாளித்துவத்திற்கு சவாலாக இருக்க முடியாத, பாட்டாளி வர்க்க அமைப்பினால் மாத்திரமே அதற்கு சவால் விட முடியம். ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமை, ஒடுக்கப்பட்ட பிரிவுகளின் ஒற்றுமை, மற்றும் வலுவான இடதுசாரிகளைக் கொண்ட மக்கள் அமைப்புகளால் மாத்திரமே நவ தாராளமய முதலாளித்துவத்திற்கு சவால் விட முடியும். அதனால் தான் நாம் சோஷலிஸம் வேண்டுமென்கிறோம். முதலாளித்துவத்தை மாற்றி சோஷலிஸத்தைக் கட்டி எழுப்பவதுதான ஒரே தீர்வு.

நாம் சோஷலிஸத்ததைக் கேற்பது அதைப்பற்றி புத்தகங்களில் அழகாக கூறப்பட்டுள்ளமைக்காக அல்ல. அந்தக் கண்ணோட்டத்திலல்ல. ஆகவே, ரஸியாவில் இருந்தது சோஷ லிஸமா, சீனாவில் சோஷலிஸம் இருக்கின்றதா என்பதெல்லாம் எமக்கு அப்பாற்பட்ட விடயம். நாம் சோஷலிஸத்தைக் கேற்பது சீனாவினதோ, ரஸியாவினதோ கண்ணோட்டத்திலல்ல. நாம் சோஷலிஸத்தைக் கேற்பது இந்நாட்டின் பாடுபடும் மனிதனின் கண்ணோட்டத்தில்.

ஒரு நாள் பிலியந்தலை பஸ் தரிப்பிடத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் பஸ்ஸில் ஒரு நபர் ஏறினார். தன்னை ஒரு தொழிலாளி என்றுகூறிக. கொண்டார். அவர் பொய் கூறியும் இருக்கலாம். அப்படிப் பொய் சொல்பவர்களும் இருக்கிறார்கள். அவர் பொய் சொன்னாலும் , உண்மை பேசுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஒரு தனியார் நிறுவனத்தின் பெயரைக் கூறி, அந்நிறுவனத்தில் அவர் வேலை செய்வதாகவும், தனக்கு மாதம் 12,000 ரூபா சம்பளம் கிடைப்பதாகவும் அவர் சொன்னார். அது சரியாக இருக்கக் கூடும். ஆனால் தொழில் திணைக்களம் கூறுகிறது, 80 வீதமான தொழிலாளர்களுக்கு மாதம் 8,000 ரூபா மட்டுமே கிடைக்கிறது என்று. தொழிலாளி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட



படிப்பகம்

www.padippakam.com

அந்த நபருக்கு மாதம் 12,000 ரூபா சம்பளம் கிடைக்கிறது. அவரது பிள்ளையொன்றுக்கு சுகவீனம், அந்த சம்பளத்தால் குழந்தையின் நோயைக் குணப்படுத்த முடியாது, எனவே, குழந்தையின் நோயைக் குணப்படுத்த எங்களிடம் பிச்சை கேற்கிறார்.

நாம் சோ'லிஸத்தைக் கேற்பது குழந்தையின் நோயைக் குணப்படுத்த பிச்சையெடுக்கும் அந்தத் தொழிலாளியின் கண்ணோட்டத்தில். குழந்தை சுகவீனமுற்ற பின்னர் தொழிலாளி பிச்சை எடுக்கக் கூடாது. அவருக்கு சமூகப் பாதுகாப்பு இருக்க வேண்டும். எனவே எமக்கு சோஷலிஸம் வேண்டும். சீனாவையோ ரஸ ியாவையோ பார்த்து அல்ல. பிலியந்தல பஸ் தரிப்பிடத்தில் நின்ற தொழிலாளியைப் பார்த்து. அவருக்காக சோஷலிஸம் வேண்டும். நாம் காணாத, அவருக்கு இருப்பதாகக் கூறும் குழந்தைக்கு சோஷ லிஸத்துக்குள் மட்டுமே நீதி கிடைக்கும். ஆகவே, எமக்கு சோஷ லிஸம் வேண்டும்.

சமீபத்தில் கட்டுநாயக வர்த்தக வலயத்தில் குழப்ப நிலையொன்று ஏற்பட்டது. ஓய்வூதிய சட்டவரைவு ஊடாக சேமலாப நிதியைக் கொள்ளையிடுவதற்கு எதிராக தோழர் தோழியர் கிளர்ந்தெழுந்தனர். ஒரு தோழர் உயிரிழக்க நேரிட்டது. அங்கிருந்த ஒரு தோழி தொலைக்காட்சி சேவையொன்றுக்கு பேட்டி கொடுத்தார். அவர் கூறினார், நான் ஒருநாளைக்கு 18 மணித்தியாலம் என்ற கணக்கில் 10 வருடங்களாக படாத பாடு பட்டு உழைத்து எனது சீதனத்திற்காக சேமித்தேன். எனது சேமிப்பை அரசாங்கம் கொள்ளையிட முயற்சிப்பதாயிருந்தால், போராடியாவது அந்தப் பணத்தைப் பொற்றுக் கொளள வேண்டும். அது குறித்து எந்தப் பிரச்சினையுமில்லை. சீதனப் பணம் சேர்ப்பதற்காக ஒரு பெண் ஒருநாளைக்கு 18 மணித்தியாளஙகள் என்ற வீதத்தில் 10 வருடங்கள் கடுமையாக உழைக்க வேண்டுமாயின், இந்த சமூக முறைக்கு தொடர்ந்தும் நிலைத்தருக்க அனுமதிக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com



சீதனத்துக்காக பணம் தேட ஏழு வருடங்களோ 10 வருடங்களோ ஒருநாளைக்க 18 மணிநேரம் படாத பாடு பட்டு உழைக்கும் எமது ரோழர் தோழியர்களுக்காக எமக்கு சோஷலிஸம் வேண்டும். அந்த அபலைகளுக்காக எமக்கு சோஷலிஸம் வேண்டும்

ஒருவிவசாயி பரங்கிக்காயொன்றை வெட்டி மாடுகளுக்குப் போட்டதை சமீபத்தில் தொலைக்காட்சியொன்றில் பாரத்தேன். அவர் தொலைக்காட்சிக்குக் கூறினார், 40,000 ரூபாய் செலவு செய்து இந்த பரங்கிக்காய் உற்பத்தியை மேற்கொண்டேன். மேலும் 2000 ரூபா கொடுத்து கூலிக்கு லொரியைக் கொண்டு வந்தேன். முழு பரங்கிக்காயகளுக்கும் 250 ரூபா தருவதாகக் கூறுகிறார். இவற்றை 250 ரூபாவுக்குக் கொடுக்க முடியாது. எனவே வெட்டி மாடுகளுக்குப் போட்டுவிட்டு வீட்டுக்குச் சென்று நஞ்சருந்தத்தான் வேண்டும். அவர் நஞ்சருந்தப் போவதில்லை. அப்படி அருந்தினால் ஊடகங்கள் வாயிலாகத் தெரியவரும். என்றாலும் அந்தத் தலைவிதிக்கு ஆளாகியிருக்கும் விவசாயிக்காக எமக்கு சோஷலிஸம் வேண்டும். சமூகத்திலிருந்து ஓரங்கட்டபட்ட பட்டதாரி இளைஞனின் கண்ணோட்டதில் எமக்கு சோஷலிஸம் வேண்டும். எமக்கு சோஷலிஸம் தேவைப்பட்டிருப்பது ஒடுக்கப்பட்ட மனிதனின் கண்ணோட்டத்தில்.

மனச்சாட்சியுள்ள மனிதர்கள் யாராவது இந்தச் சமூகத்தில் இருந்தால், இந்த 35 வருடகால புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தில் மனச்சாட்சசியை இழக்காத யாராவது இருந்தால், கொஞ்சமாவது மனச்சாட்சி உள்ளவராக இருந்தால் இந்த சமூகத்திற்காக ஏதாவது செய்தாக வேண்டுமே என்ற உயர் எண்ணம் கொண்ட, வஞ்சகமில்லாத மனிதர்கள் யாராவது , வெளிப்டையான சுயநலத்துக்குள் மூழ்கி நாற்றமடிக்காதவர்கள் யாராவது இருந்தால் அவர் ஒன்றைச் செய்ய வேண்டும். சோஷலிஸத்திற்காகப் போராட வேண்டும். எனவே அவ்வாறான மனிதர்களை ஒன்று சேர்த்த உண்மையான இடதுசாரி இயக்கத்தை



படிப்பகம்

www.padippakam.com

கட்டியெழுப்ப வேண்டிய சவால் எம் முன்னே இருக்கின்றது என்ற உண்மையை உணர வேண்டும். அந்த உண்மையான இடதுசாரி இயக்கம் என்பது கோஷங்கலால் அல்ல. இடதுசாரிகள் என்பது, எல்லாவற்றுக்கும் எதிர்ப்புக் காட்ட கூடியவரோ, தனித்துவத்தை இழந்ததால், தனித்துவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அரசியல் மேடைகளில் கூச்சலிடும் பலவீனர்களோ, பணம் படைத்தோர் மீது பொறாமை கொள்வோரோ அல்ல. இடதுசாரி என்பது ஒரு விடுதலை வீரன். ஒரு விடுதலை வீரன் தனது வாழ்க்கையின் மூலம தான் விடுதலை வீரன்தான் என்பதைக் காட்ட வேண்டும். ஆகவே, எமக்கு இப்போது ஒரு இடதுசாரி இயக்கம் தேவைப்படுகிறது. அந்த இடதுசாரி இயக்கம் என்பது, தமது வாழ்நாள் முழுவதும் சோஷ லிஸவாதியாக வாழ்ந்து காட்டக் கூடிய மனிதர்களைக் கொண்டது.

அன்புக்குறிய தோழர் தோழியரே,

புரட்சியின் பின்னர் சோஷலிஸம் உருவாகாது. சோஷலிஸம் உருவாவதற்குத் தேவையான கலாசாரம் அதற்கு முன் தோன்றிவிடும். எனவே, அந்த வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்கும், இந்த நாற்றமெடுத்த சமூக முறைக்கு எதிராக மாற்று வாழ்க்கை முறையை கடைப்பிடிக்கும் உண்மையான, இடதுசாரி இயக்கமொன்று எமக்குத் தேவைப்படுகிறது. அந்த உண்மையான இடதுசாரி இயக்கத்தை நாம் கட்டி எழுப்ப வேண்டும்.

இந்த சமூக அழிவுக்கு முன்னால் இடதுசாரி இயக்கம் இரு பக்கத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஒருபக்கம் எமது நண்பர்கள் இருக்கின்றனர். அவர்கள் தீவிர இடதுசாரி போக்கில் சென்று, சமூகத்திலிருந்து ஒதுங்கி , சிறு குழுக்களாக இனையத்தளங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் கோட்பாட்டை குறித்து மட்டுமே கதைக்கின்றனர். அவர்கள் அதி தீவிர இடதுசாரி போக்கில் நுழைந்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



மறுபக்கம், இந்த பாரிய இயக்கத்தைக் கட்டியெழுப்புவதில் வெற்றிகண்ட இடதுசாரி இயக்கங்களின் முன்னால் தலைவர்கள சிலர், இடதுசாரி இயக்கம் போதும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் இப்போது வலது பக்கம் திரும்பியுள்ளனர். இப்போது, இடதுசாரி இயக்கத்துக்குள் இரண்டு போக்குகள் காணப்படுகின்றன. அதி தீவர போக்குடையவர்கள் மற்றும் இடதுசாரி இயக்கம் போதும் என்ற போக்குடையவர்கள். அதி தீவிர போக்கும் தவறு, இனி போதும் என்ற போக்கு அதையும் விட தவறு. ஆகவே அதற்கு மாற்றமான உண்மையான இடதுசாரி இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும். தமது வாழ்க்கையின் மூலம் சோஷலிஸத்தை நிருபித்துக் காட்டும் மனிதர்களைக் கொண்ட, சமூகத்தின் விடுதலை வீரர்களை உள்ளடக்கிய இடதுசாரி இயக்கத்தை அமைக்க வேண்டும். அவ்வாறானதொரு இடதுசாரி இயக்கத்தினால் மாத்திரமே இந்த தலைவிதியிலிருந்து சமூகத்தை மீட்டெடுக்க முடியும். முதலாளித்துவம் இந்தச் சமூகத்தை முச்சந்தியில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. சமூகம் காட்டுமிராண்டித்தனத்தை நோக்கி பயணிக்கிறதா? இல்லையாயின், நல்ல எதிர்க் காலத்தை நோக்கி பயணிக்கிறதா? மனித சமூகத்திற்கு உண்மையான மனிதத் தொடர்ப்புகள் நிறைந்த நல்லதொரு எதிர்காலத்தை நிாமாணிக்கக் கூடிய பயணத்தை ஆரம்பித்தருக்கிறதா என்பதை உணர வேண்டும். எமது பரம்பரையில் எஞ்சியிருக்கம் மனச்சாட்சியுள்ள மனிதர்கள் ஒன்று சேர்ந்து உண்மையான இடதுசாரி இயக்கத்தை அமைக்க வேண்டும். அந்த உண்மையான இடதுசாரி இயக்கம் செய்ய வேண்டியது என்னவென்றால், சமூகத்தில் ஏற்பட்டு வரும் அழிவுகளை இனம் காட்டி, இந்த அழிவிலிருந்து மீள்வதற்கு வழிகாட்ட வேண்டும். அதற்கு பரந்த அறிவு, விளக்கம், தியாகம் மற்றும் சிறந்த வேலைத்திட்டம் தேவைப்படுகிறது. அது கஷ் டமான பாதை. எமக்குத் தேவையென்றால் தனிப்பட்ட ரீதியில் செல்வங்களைக் குவித்துக் கொள்ளக் கூடிய பாதையைத் தெரிவு



படிப்பகம்

www.padippakam.com

செய்ய முடியம். அல்லது, சமூகத்திற்கு விடுதலையைப் பெற்றுத் தரும் பாதையைத் தெரிவு செய்ய முடியம். இப்போது நாம் இந்த இரண்டு பாதைகளில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும். நீங்கள் சமூக மாற்றத்திற்கான பாதையைத் தெரிவு செய்ய விரும்புவீர்கள் என நாங்கள் நம்புகிறோம். அதனை மேற்கொள்ள நீங்கள் உடன்படுகிறீர்கள் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அதற்கு உடன்படுங்கள் என்று நான் உங்களிடம் கேற்க மாட்டேன். அதற்கு நீங்கள் உடன்படுகிறீர்கள். அதற்காகத்தான் இங்கு நீங்கள் கூடியுள்ளீர்கள். அதற்காகவே நீங்கள் செயல்படுகிறீர்கள். அதற்காக உங்களுக்கு துணிவும் சக்தியும் கிடைக்க பிரார்த்தித்து விடை பெறுகிறேன். நன்றி.



படிப்பகம்

www.padippakam.com

புதிய லிபரல்வாத முதலாளித்துவத்தின்
இரண்டாவது கட்டம்
மற்றும்

# இடதுசாரிகளுக்கான சவால்

இடதுசாரி இயக்கத்திற்கு என்ன நடந்தது? இடதுசாரிகள் இயக்கம் நவ தாராளமய முதலாளித்துவத்திற்கு எதிராக போராடிக் கொண்டே முதலாளித்துவத்திற்கு பலியாகி விட்டது. அது வரலாற்றில் நடந்த ஆச்சர்யமான சம்பவமாகும். புதிய லிபரல்வாத முதலாளித்துவம் வேண்டாமென பதாதைகளை கையில் ஏந்திய நாம், முதலாளித்துவத்தின் பலிக்கடாவாக ஆகிவிட்டோம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், உண்மையான இடதுசாரி இயக்கத்தைக் கட்டியெழுப்ப முடியாது. புதிய விபரல்வாத முதலாளித்துவ மனிதன், அந்த கொடுமையான,சுயநலம் கொண்ட வெற்று மனிதன் சிகப்புச் சட்டையை அணிந்துக் கொள்வதால் மாத்திரம் அவன் இடதுசாரியாக மாட்டான். இடதுசாரி என்பவன், வாழ்க்கையில் எடுத்துக் காட்டுகளுடன் கூடிய வித்தியாசமான மனிதன். இடதுசாரி இயக்கம் என்பது அந்த பிற்போக்குத்தனத்திலிருந்து முற்றாக விடுபட்ட மனிதர்களின் கூட்டம்.

ISBN 955-0480-06-7
9789550480067

விலை ரூ. 50/=

மாலிமா வெளியீடு

படிப்பகம்